Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
TP - 0212225969
Hotline: 0212229497
(C/2809)

முரசு – 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | ஆனி 01 | சனிக்கிழமை | (15.06.2013) | பக்கங்கள் 20 | ஓசை – 258


மந்திரத்தில் மாங்காய் விழுமா? 04



மீள்குடியோருக்கு வழங்கப்படும் 07


உணர்ச்சி உண்டா? 10


சிதைகின்றன ஆதாரங்கள் 12


கைது 18

# சிற்றூழியர் நியமனம்
# யாழில் நேற்று 1317 பேருக்கு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் உள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றுவதற்காக ஆயிரத்து 317 பேருக்கு சிற்றூழியர்களுக்கான நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டிருக்கிறது.


யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த வைபவத்தின் போது இவர்களுக்கான நியமனக் கடிதங்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட க்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் வழங்கினர்.

சுகாதாரத் திணைக்களம், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றிலும் மற்றும் கல்வித் திணைக்களத்தில் கல்விசாரா கடமைகளுக்காகவும் பணியாற்றுவதற்காக இந்த நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வடபகுதியில் மேற்படி திணைக்களங்களில் நீண்டகாலமாக நிலவி வந்த மேற்படி ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் இப்போது நிரப்பப்பட்டிருக்கின்றன.

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் வடமாகாணத்தில் அதிகளவான சிற்றூழியர்கள் ஒரே தடவையில் இப்போது நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க



இராணுவத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இவரது நியமனம் இடம்பெற்றுள்ளது என பாதுகாப்பு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மேஜர் ஜெனரல் பதவி நிலை வகிக்கும் தயா ரத்நாயக்கா, லெப்டினன் ஜெனரலாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அவருக்கு இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பதவி உயர்வானது இம்மாதம் முதலாம் திகதி முதல அமுலுக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. வடக்கில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது வன்னிக் கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய ஜகத் ஜயசூரிய, 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இவர், வன்னி கட்டளைத்

(19) ஆம் பக்கம் பார்க்க

# கைதிகளுக்கு சட்டஉதவி வழங்க கூட்டமைப்பு தயங்குவது ஏன்?

## கைதிகளின் பெற்றோர் குமுறல்

(கொழும்பு)

விசாரணைகள் இன்றி, விடுதலையும் இன்றி பல வருடங்களாக சிறைக்கூடங்களில் வாடும் அரசியல் கைதிகளுக்கு சட்ட உதவி வழங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரை எந்தக் காத்திரமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கூட்டமைப்பின் இந்தப் போக்கைக் கண்டித்த கைதிகளின் பெற்றோர் இணைந்து கூட்டமைப்பின் தலைவர் இரா. சம் பந்தனுக்கு காரசாரமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சட்டத்தரணிகள் பலர் இருந்தும்கூட ஏன் எங்களுடைய பிள்ளைகளின் சட்ட நடவடிக்கைக்கு உதவமுன் வரவில்லை? தேர்தல் காலங்களில் மட்டும் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகக் காட்டுகின்ற அக்கறை இந்த விடயத்தில் கூட்டமைப்புக்கு இல்லாமல் போனது ஏன்? என்றும் அவர்கள் தமது கடிதத்தில் கேட்டுள்ளனர்.

இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

கடந்த மூன்று தசாப்த காலங்களுக்கு மேலாக நடைபெற்ற கொடிய யுத்தத்தில் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்களாகிய நாம் சொல்லொண்ணாத் துன்பங்களையும பாதிப்புகளையும், இழப்புக்களையும் அடைந்து ஏதுமற்ற ஏதிலிகளாக, இழப்பதற்கு இனிமேல் எதுவுமில்லை என்ற நிலையில் நடைப்பிணங்களாக இருக்கின்றோம் என்பது நீங்கள் அறிந்ததேயாகும்.

எதிர்காலமே இருள் என்ற

(19) ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி இன்று கிளிநொச்சியில்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கிறார்.

புனரமைப்பு செய்யப்பட்ட ஏ-9 வீதியை ஜனாதிபதி இன்று திறந்து வைக்கவுள்ளார். அத்துடன் இரணைமடு விமானத் தளத்தையும் அவர் திறந்து வைக்கவுள்ளார். (40)




பொருத்தமான தொழில் தகைமை இல்லாமல் வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்க முடியாது!

இதோ உங்களுக்காக நாம் தரும்
UK, Australia, Canada, Malaysia, Singapore என
விரும்பிய நாட்டுக்குச் சென்று பணம் சம்பாதிப்பதற்கான

வருமானத்துடன் கூடிய
தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு
[உணவு, தங்குமிட வசதி இலவசம்]

25% Discount on SPOT ADMISSION

- பயிற்சிக் காலத்தில் 50.000 ரூபா வருமானம்
- பயிற்சி நிறைவில் UK, Australia, Malaysia சர்வதேச தரச் சான்றிதழ்கள்
- பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்தபின் Work Permit உடன் வேலைவாய்ப்பு
- UK, Australia, Canada என விரும்பிய நாட்டில் சட்டபூர்வமாக வாழும் வாய்ப்பு



3 in 1
City & Guilds
aets
UEL University of East London
SkillsMalaysia INVITE

IELTS, வங்கிப்பண வைப்பு
தூதரக நேர்முகத் தேர்வு } அவசியமில்லை
யாழ்ப்பாணத்திலேயே விசாவைப் பெற்று உடனே பயணிக்கலாம்!

வெளிநாட்டுப் பல்கலைக்கழகப் பிரதிநிதியை நேரில் சந்தித்து அனுமதி பெற
ஜூன் 15 சனி ▸▸ யாழ்ப்பாணம் சிகரம் விரிவுரை மண்டபம்
ஜூன் 16 ஞாயிறு ▸▸ வவுனியா நெல்லிஸ்ரார் ஹோட்டல்
ஜூன் 17 திங்கள் ▸▸ கிளிநொச்சி சோலைவனம்
ஜூன் 18 செவ்வாய் ▸▸ மீண்டும் யாழ்ப்பாணம் சிகரம் விரிவுரை மண்டபம்

பிரவேசம் இலவசம் முற்பதிவுகளுக்கு: 077 36 16 798
இதுவரை 3 அணிகளாக 30க்கு மேற்பட்ட மாணவர்கள் பயணமாகியுள்ளனர்

வெளிநாடு செல்லும் வசதியில்லாத மாணவர்களுக்கு உள்நாட்டு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான சிகரம் தொழில் வழிகாட்டல் ஆலோசனை முற்றிலும் இலவசம்!

சிகரம் கல்வி - தொழில் வழிகாட்டி
MEDIA & EDUCATION
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(764 பஸ் வழி: DAMRO காட்சியறைக்கு முன்னால்)
தொ.பே.: 021 222 00 11 நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk
(C/2841)

# பயணச்சீட்டு பரிசோதகர்களை அடையாளம்காண முடியவில்லை

இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளில் பயணச்சீட்டைப் பரிசோதனை செய்ய வருபவர்கள் தம்மை அடையாளப்படுத்துவதில்லை. இதனால் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

பேருந்துகளில் பயண நெரிசலின் போது திடீரென்று பேருந்துகளில் ஏறும் பரிசோதகர்கள் ரிக்கெற்றைக் கேட்கும் வேளையில் பயணிகள் கொடுப்பதா விடுவதா எனச் சந்தேகம் கொள்கின்றனர். இவர்கள் ஏனைய பயணிகளைப் போலவே சாதாரண உடையுடன் காட்சியளிப்பதால் பயணிகளால் இவர்களை இனம் காண்பது என்பது மிகவும் கடினமானதாக உள்ளது.

எனவே அவர்கள் தமக்கான அடையாள அட்டையையோ அல்லது வேறு வகையான உடைகளையோ அணிந்து தம்மை அடையாளப்படுத்தினால் பயணிகள் சிரமமின்றி பயணத்தை மேற்கொள்வார்கள் என்றும் சந்தேகம் எதுவும் ஏற்படாது. இவர்கள் உண்மையிலே ரிக்கற் பரிசோதகர்கள் தான் என்பதை பயணிகள் இலகுவாக இனம் காண்பார்கள்.

பேருந்தில் பயணத்தை மேற்கொள்வோர் எத்தனை விதமானவர்களாக இருப்பர் அத்துடன் சிலர் பேருந்தில் பயணிப்பது முதல் தடவையாகவும் சிலர் வருடத்துக்கு ஒருமுறை என பயண விதிமுறைகளை அறிந்தவர்களாகக் கூட இருக்கலாம்.

எனவே உரியவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி பயணிகளின் சந்தேகத் தன்மையைப் போக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் 9 இற்கு கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கேந்திர கணித செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு தணலாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் கணித மூலவள நிலையத்தில் நடைபெறவுள்ளது. செயலமர்வுக்கு வரும் குறித்த பாட ஆசிரியர்கள் தங்கள் பாடசாலையிலுள்ள தரம் 9,10 இல் கல்வி கற்கும மாணவர்களின் தொகை மற்றும் புள்ளி விபரங்களையும் தவறாது கொண்டுவருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் அறிவித்துள்ளார்.(109)

# கள்ளமாடு வெட்டியவர் துன்னாலை பொலிஸாரால் கைது

(வடமராட்சி)

வடமராட்சி நெல்லியடி கடவத்தை கிழக்கு துன்னாலையில் சட்டவிரோதமாக மாடு வெட்டிய ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த நபர் கடந்த சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் தனது வீட்டுக்குள் வைத்து சட்டவிரோதமாக கிரியைக்காக மாட்டினை வெட்டியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக தகவலறிந்த பொலிஸார், குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்து சென்று அவரை கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளனர். இவர் மீது நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார். (18)

# கும்பாபிஷேகம்

வடமராட்சியில் வரலாற்றுப் புகழ்மிக்க ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 9.36 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. இதில் 25 ஆம் திகதி அடியார்களின் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், கிரியைகள் ஆலய பிரதம குருக்கள் பிரம்ம ஸ்ரீ புருஷோத்தமக் குருக்கள தலைமையில் இடம்பெறவுள்ளது. (109)


## சிறுவிளம்பரம்

### வீடு விற்பனைக்கு

சுதுமலை தெற்கில் சகல வசதிகளும் கொண்ட ஒரு வீடு விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு: மு.சீவறட்ணம் (சிவராசா) சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R.189)

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 964 | திகதி 13.06.2013

வெற்றி எண்கள்: 31 32 48 53 | ஆங்கில எழுத்து: G

ஜக்பொட் பரிசு ரூ. 14,125,100/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 14,125,100/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 1,000,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 9 | 50,000/= | ரூ. 450,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 260 | 1,000/= | ரூ. 260,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 464 | 1,000/= | ரூ. 464,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11738 | 60/= | ரூ. 704,280/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6121 | 40/= | ரூ. 244,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154001 | 20/= | ரூ. 3,080,020/= |
| ஆங்கில எழுத்து | 22401 | 20/= | ரூ. 448,020/= |
| | | மொத்தம் ரூ. | 6,651,160/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 704320887-9-49 |
| மட்டக்களப்பு | 704328551-1-11 |
| கொழும்பு | 704328389-3-23 |
| புத்தளம் | 704333505-2-12 |
| இரத்தினபுரி | 704328628-6-26 |
| கொழும்பு | 704333331-2-22 |
| கண்டி | 704323669-6-46 |
| யாழ்ப்பாணம் | 704324774-6-16 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,051,160/=


எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 14,426,040/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.06.17 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை. யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 33546/7

(C.2840)


# மரண அறிவித்தல்



## சரவணமுத்து பரம்சோதி

(உரிமையாளர் - வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்)

காரைநகர் மனற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து பரம்சோதி கடந்த 13.06.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தேவகுஞ்சரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி – செந்தில்நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், செந்தூரன், சிவதர்ஷினி, சாளினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காண்டீபனின் அன்பு மாமனும், காலஞ்சென்ற சிதம்பரநாதன் மற்றும் தனலக்சுமி தம்பதியினரின் சம்பந்தியும், கருணாநிதி, சிவசோதி, கற்பகநாதன், கனேசன், பாக்கியவதி, தவமணி, கோகிலாவதி, சிவமணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அருணகிரிநாதன், இராசகுமாரி, கமலக்கண்ணன், சாந்தகுமாரி, யோகேஸ்வரி, பரமேஸ்வரி, சறோஜினிதேவி, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சிவானந்தன், சிவபாலன், இராஜேந்திரம் ஆகியோரின் மைத்துனரும், சந்திரன், சொர்ணதேவி, சிவயோகன், நகுலி ஆகியோரின் சகலனும், ஹரிஷின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 16.06.2013 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மனல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

354/7, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(C/2535)

தகவல்:
குடும்பத்தினர்

# அரசாங்க ஊழியர்களுக்கான சுகவாழ்வு மைய வைத்தியசாலை

## யாழ். நகரில் இயங்குவதாக தெரிவிப்பு

(வலிகாமம்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச ஊழியரின் சுகவாழ்வு நலத்திட்டம் கருதி, சுகவாழ்வு மைய வைத்திய சாலையொன்று அண்மைக் கால மாக யாழ். நகரில் இயங்கி வரு கிறது. இந்தச் சுகவாழ்வு மையம், திருநெல்வேலியில் அமைந்துள்ள பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலா சாலைக்கு அண்மையில் மாடிக் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது.

இங்கு இலவசமாக அரச ஊழி யர்கள் தொற்றா நோய்களுக்கான வைத்திய சிகிச்சையினைப் பெற் றுக்கொள்ள முடியும் என வைத் திய கலாநிதி வை.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

தொற்றும் தொற்றா நோய்கள் தொடர்பான அரச ஊழியர்க ளுக்கான நடமாடும் வைத்திய சேவைக் கருத்தரங்கு உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதி காரி பணிமனையின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில்,


அரச ஊழியர்களுக்கான இத் தகைய வைத்தியசாலை இலங்கை யில் இரண்ட காணப்படுகிறது. ஒன்று குருநாகலிலும் மற்றையது யாழ். நகரிலும் காணப்படுகிறது. இந்த வைத்தியசாலைகளில் தொற்றா நோய்களுக்கு அரச ஊழியர்கள் சிகிச்சை பெறலாம்.

சிகிச்சைக்குச் செல்வோர் தாம் அரச ஊழியர் என்பதை உறுதிப் படுத்தும் அடையாள அட்டையை எடுத்துச் செல்லவேண்டும். அத்து டன் பிரதேச சுகாதாரப் பகுதியி னால் நடமாடும் வைத்திய சேவைக் கருத்தரங்கில் வழங்கப்பட்டுள்ள வைத்திய அறிக்கைப் புத்தகத்தை யும் எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்தச் சுகவாழ்வு மையத்தில் உடற்பயிற்சி மையமும் உண்டு. நீரிழிவு நோயாளிகள் இங்கு சென்று பயிற்சிகளைப் பெறலாம். உடற்பயிற்சி, உணவுப் பழக்கம், மதுப்பாவனை நிறுத்தம் என் பவற்றின் மூலம் மனிதன் நோய் களிலிருந்து விடுபடமுடியும்.

குறிப்பாக நீரிழிவு நோய் உள்ளவர்கள் இந்த விடயங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். (06)

## சூரர் படை அழித்தவனே!



அறுபடை வீட்டிலே வீடுபடையும்
வேறுபடையின்றி வேலாயுதமோடும்
சூ ரர்படை அழித்தவனே - முருகா
போராட்சி எம் பூமியெங்கும்
பொல்லா வினையறுத்து எம்மை
பொறுமையோடு காத்தவனே - கந்தன்
கந்தவனக் கடவையிலே கற்பூரமகிமையும்
கல்யாண வேலவனின் கலியுக புதுமையும்
காணக்கண்கள் துடிக்குதையா - குமரா!

பொலிகண்டி கல்யாண வேலவன் ஆலய மஹோற்சவத்தில் 7 ஆம் திருவிழா இன்றாகும்.

பொலிகையூர்
கே.கே.விசிந்தன்

# கால்நடைகளின் தங்குமிடமாக அல்லைப்பிட்டி பிள்ளையார் ஆலயம்



(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டியில் அமைந் துள்ள மிகப்பழமையான ஆலய மாக விளங்கிய சிந்தாமணிப் பிள்ளையார் (சருகுப்பிள்ளையார்) ஆலயம் இன்று கால்நடைகள் தங்கும் இடமாக மாறியுள்ளதாக பல்வேறு தரப்பினரும் கவலை கொள்கின்றனர்.

இந்த ஆலயத்திலிருந்த சாமி சிலைகள் மூல விக்கிரகம் உட்பட அனைத்தும் திருடப்பட் டுள்ள நிலையில் விக்கிர கங்கள் அற்று வெறும் கட்டடம் மட்டும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தை பராமரித்து வந்த சிவசம்பு தனபாலசிங்கம் மரண மடைந்ததைத் தொடர்ந்து இவ்வாலயம் கவனிப் பாரற்று விடப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த ஆலயத்தின் பழைய நிர்வாகத்தைப் புதுப்பித்து புலம் பெயர் அல்லைப்பிட்டி மக்களின் ஒத்துழைப்புடன் பிள்ளையார் விக் கிரகம் ஒன்றை வைத்து அழியா மல் பூஜை செய்து பாதுகாக்க முன்வர வேண்டும் என்ற கோரிக்கை ஒன்று சமூக ஆர்வ முள்ளவர்க ளினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

# கழிவு நீர் குட்டையாக ஐந்து சந்திப் பகுதி வடிகால்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி ஐந்து சந்தியிலுள்ள வடிகாலில் கழிவு நீர் நிரம்பியுள்ளதால் சுகாதார சீர்கேடான நிலையில் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து மலேரியா, டெங்கு போன்ற ஆட்கொல்லி நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக பொது மக்கள் அச்சமடைந்துள்ளார் கள்.

மாவடி வீதியில் புதிதாக வடிகால் அமைப்பின் வேலை மெதுவாக நடைபெறுவதினால் கழிவு நீர் செல்வதற்குரிய வழி தடைப்பட்டுள்ள படியினால் தான் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

இரவுவேளையில் இப்பகுதியி லுள்ள வீடுகளில் வசிப்போர் மின்விசிறி, நுளம்புச் சுருள் பற்ற வைத்தும் நுளம்பு இவற்றிற்கு மேலாகப் பறந்து திரிந்து மனிதர் களைத் தாக்குவதாகவும், இதனால் டெங்குநோய்க்கு ஆளாகி விடு வோம் என்ற பயத்தில் இரவில் தூக்கத்தை விட்டு நுளம்பைத் துரத்துவதில் கவனம் செலுத்துவ தாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

டெங்கு நோயின் தாக்கம் ஏற்படாதிருக்க உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (105)

# மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவை யொட்டி யாழ். தமிழ்ச் சங்கமும், யாழ மறை மாவட்டமும் இணைநது நடத்திய பாடசாலை மாணவர்க ளுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாண வர்களின் விபரம் வெளியிடப்பட் டுள்ளது. விபரம் வருமாறு,

பேச்சு - கீழ்ப்பிரிவு

வி.அஜின்டெஸ்னோ (யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி), இ.ராருஜன் (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி), கு.வினோஜன் (நெடுந்தீவு மாவ லித்துறை றோ.க.த. வித்தி), ப.வைஸ் ணவி (வாதரவத்தை விக்னேஸ் வரா வித்தியாலயம்).

மத்திய பிரிவு

க.ஜெறி (யாழ். புனித பத்திரி சியார் கல்லூரி), பா.சஞ்சிகாயினி (யூனியன் கல்லூரி தெல்லிப்பளை), ஆ.தர்சினி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

மேற்பிரிவு

ரா.தனரோஜினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), வே.ஜந்துஜா (புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி), ர.கோபிகா (யாழ். கனகரட்ணம் மத்திய ம.வி).

அதிமேற்பிரிவு

ஶ்ரீ.சிவஸ்கந்தஶ்ரீ (யாழ். இந்துக் கல்லூரி), சு.றொபின்ஸ் கமில்ரன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சா.நிரோஷா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி). (தொடரும்....)

# போட்டி போடுகின்றன பேருந்துகள் பாதிக்கப்படுவது பொதுமக்களே!

(அச்சுவேலி)

யாழ் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பேருந்துகள் இ.போ.ச. பேருந்துகளுடன் போட்டி போட்டுக்கொண்டு ஓடுவதாக பய ணிகள் தரப்பில் தெரிவிக்கப்படு கிறது.

தனியார் பேருந்துகள் சேவை நிலையத்தில் இருந்து தமக்கான நேரத்திற்கு பயணத்தை ஆரம் பிக்கும வேளையில் இ.போ.ச. பேருந்துகள் முன்னால் சென் றாலோ அல்லது பின்னால் வரு வதைக் கண்டாலோ வேகமாகப் பயணிக்கின்றன.

இதனால் பேருந்துகளில் பயணிக்கும் முதியவர்களும், நோயாளர்களும் பல்வேறு துன்ப நிலையை எதிர்கொள்கின்றனர். அத்துடன் பேருந்துத் தரிப்பிடத்தில் நிற்கும் பயணிகளை அவசர அவ சரமாகவும் ஏற்றுகின்றனர். பின் னால் இ.போ.ச பேருந்து வந்தால் அவற்றை முன்செல்ல விடாது மிக வும் வேகத்துடன் தனியார் பேருந்துகள் பயணிக்கின்றன.

இதனால் விபத்துக்கள் ஏற்படும் அபாயநிலையும் ஏற்படலாம் எனப் பயணிகள் தரப்பில் விச னம் தெரிவிக்கப்படுகிறது. அத் துடன் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் ஓரளவேனும் பயணி களின் நலனையும் கருத்திற் கொண்டு செயற்படுமாறு பயணி கள் சார்பில் தெரிவிக்கப்படு கிறது. (85)





வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்த மருத்துவம் மற்றும் மூலிகை தொடர்பான கருத்தரங்கும் கண்காட்சியும் நவக்கிரி மூலிகைத் தோட்டத்தில் கடந்த 10 ஆம் திகதி முதல் 12 ஆம்திகதி வரை நடைபெற்றது

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கண்காட்சிக் கூடத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், சித்த மருத்துவத்துறை சார்ந்தோரால் மூலிகை குறித்து விளக்கமளிக்கப்படுவதையும், கண்காட்சிக் கூடங்களையும் காணலாம்.

இந்த உலகத்தில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டாம். அவ்வாறு நீ செய்தால் நீ உன்னை அவமதித்துக் கொள்வதாகப் பொருள். - அன்னை திரேசா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மந்திரத்தில் மாங்காய் விழுமா?

"ஒரு இரவு முடிந்து மறுநாள் விடிந்தபோது, அவர் புகழின் உச்சியில் இருந்தார்" என்று ஆங்கில இலக்கியத்தில் தக்கரே பற்றிச் சொல்லப்படுவதுண்டு. இதற்குப் பதில் சொல்கிறவர்கள், ஆமாம் அவர் அந்த ஒரே இரவில் புகழ் பெற்றுவிடுவதற்காக பல்லாயிரக்கணக்கான இரவுகள் விழித்திருக்க வேண்டியிருந்தது என்பார்கள்.

எந்த ஒரு காரியமும் வெற்றிபெற அதற்குரிய விலை செலுத்தப்பட்டாக வேண்டும். அந்த விலை – நமது கடும் உழைப்பு. ஆனால் திடீரென்று வெற்றிபெறும், புகழடையும் சாகச நிகழ்வை எதிர்பார்ப்பதே நமக்கெல்லாம் விருப்பமாக இருக்கிறது. எல்லோர்க்குமிருக்கும் இந்த விருப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மந்திரத்தில் மாங்காய் விழும் கதைகளைச் சொல்லியபடியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தங்கள் தேர்தல் வெற்றிகளை நிகழ்த்திக் கொள்கிறார்கள்.

அரசாங்கம்தான் தீர்வை வைக்க வேண்டும் என்று சொல்லி சில நாட்களை ஓட்டுவார்கள். எங்களுக்கு வாக்குப்பலத்தைக் காட்டினால் சர்வதேசம் வந்திறங்கும், தீர்வைத் தந்துவிட்டுப் போகும் என்றும் சில நாட்களை ஓட்டுவார்கள். தவிர மற்றபடி, நம் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள பெரும்பாலான தரப்புகள் பரிசீலிப்பதற்கு உடன்படத்தக்க தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து, தென்னிலங்கையின் ஆதரவுத் தரப்புகள் – முற்போக்கு சக்திகளின் ஆதரவையும் பெற்று முன்னகரும் தீர்வு நடைமுறைக்குச் சாத்தியமான முயற்சிகளையோ உழைப்பையோ இவர்கள் மேற்கொள்வதில்லை என்பதே இங்கு பிரச்சினை.

எந்தவொரு ராஜதந்திரமோ, அரசியல் முன்னோக்கிய பார்வையோ அற்று இலங்கை – இந்திய ஒப்பந்தத்தால் கிடைத்த மாகாணசபை, சந்திரிகா வைத்த தீர்வு, மங்கள முனசிங்க குழு அறிக்கை, திஸ்ஸவிதாரண பரிந்துரைகள் எல்லாவற்றையும் அந்தந்த நேரத் தில் வேண்டுமென்றே புறங்கையால் விலக்கிவிட்டு வீரம் பேசு வார்கள். அதெல்லாம் கைநழுவிப் போனபிறகு அந்தத் திட்டங் களின் அடிப்படையிலேயே இப்போதிருக்கும் அரசு தீர்வை வைக்க வேண்டும் என்று கீழிறங்கிநின்று மீண்டும் வெறும் வீரம் பேசிக் கொண்டிருப்பார்கள்.

நேற்றுவரை பதின்மூன்றாவது திருத்தத்தை இனப்பிரச்சினையின் தீர்வுக்கான இடைக்காலத் தீர்வாகவோ அல்லது அதற்கான தொடக்கப்புள்ளியாகவோ கூட தாங்கள் கருதவில்லை என்று வெறும் வாய்வீரம் பேசிக்கொண்டிருந்ததைத்தான் கண்டோம். கடந்த புதன்கிழமை கூட யாழ் ஊடக மையத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினரான திரு சிவஞானம் சிறீதரன் அதையேதான் சொன்னார்.

இப்படியே, அதையெல்லாம் நாங்கள் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டோம் என்று சொல்லிச் சொல்லி, 13–வது திருத்தத்தைப் பேணிக்கொண்டு அதிலிருந்து மேலே பேசுவதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவையும் நிராகரித்து, அதிலுள்ள சில அம்சங்கள் இல்லாமல் போவதற்கும் வலுக்குறைவதற்கும் இவர்களேதான் தூண்டுகோலாக இருந்தார்கள். வெறுமனே வெளியே நின்று சண்டித்தனம் பேசியே இன்றைய நெருக்கடிநிலை வரை கொண்டு வந்தார்கள்.

இப்போது 13–வது திருத்தத்தின் வலுக்குறைப்பை நிறுத்துவதற்கு இந்தியாவுக்குப் பேசப்போகிறதாம் கூட்டமைப்பு. கடந்த முறை இவர்கள் பேசப் போனபோதே அவர்கள் தெளிவாக என்ன சொல்லியிருந்தார்கள். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குப் போய் 13–வது திருத்தத்திலிருந்து பேச ஆரம்பியுங்கள் என்றுதானே பன்னிப் பன்னி பல பேருக்கூடாகவும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பிடித்துக்கொண்டு மேலேறக் கொடுக்கும் கயிற்றின் நுனிகளையெல்லாம் விட்டுவிட்டுக் "காப்பாற்றுங்கள்" என்று கதறிக் கொண்டிருந்தால் யார், என்னதான் செய்யமுடியும்?

இந்த நாடகம்தான், நாடாளுமன்றக் கதிரைகளை மட்டும் பிடித்துக் கொள்வதற்கான தமிழ்க் கூட்டமைப்பின் "கதறல் அரசியல்" ஆகத் தொடர்கிறது. - ஆசிரியர்

# பிரிவினைவாதத்திற்கு வழிவகுக்கும் வெள்ளையானை மாகாண சபை

### சிங்கள ராவய அமைப்புத் தெரிவிப்பு

மாகாண சபை என்பது பொதுத் தேர்தலில் தோல்வியடைந்து நாடாளுமன்றத்திற்கு செல்ல முடியாதவர்களை வைத்துக்கொள்ளும் நிறுவனம் எனவும் நாட்டின் நிர்வாகத்தில் சிக்கலை ஏற்படுத்தி, பிரிவினைவாதத்திற்கு வழியை ஏற்படுத்தும் வெள்ளை யானை எனவும் சிங்கள ராவய அமைப்பின் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார். தெஹிவளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இவ்வாறான நிறுவனங்கள் நாட்டில் இயங்கும் போது, சில நேரங்களில் மத்திய அரசாங்கத்தினால் நிர்வாகத்தைக் கூட கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். இதனால் 13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படுமானால் அதற்கு முன்னர், போருக்கு முன்னர், வடக்கில் வாழ்ந்த 15 ஆயிரம் சிங்களக் குடும்பங்கள் அங்கு மீள்குடியேற்றப்பட்டு, அவர்கள் வாக்காளர்களாக பதிவுசெய்யப்பட வேண்டும். வாக்குரிமை இந்த மக்களுக்கு வழங்க அரசாங்கமும், தேர்தல் ஆணையாளரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தயாரத்ன தேரர் கூறியுள்ளார்.

# மீனவருக்கு உயிர் பாதுகாப்பு அங்கி வழங்கத் தவறிவிட்டது அரசு

### பொதுமீனவர் சம்மேளனம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மீனவர்களுக்கு உயிர் பாதுகாப்பு அங்கிகளை வழங்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியுள்ளதாக அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனம் குற்றம் சுமத்தியுள்ளது.

அமைச்சர்கள் மாறும்போது கொள்கைகளும் மாற்றப்படுகின்ற நடைமுறையே இதற் குக் காரணம் என சம்மேளனத் தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.

உயிர் பாதுகாப்பு அங்கிகளை மீனவர்களுக்கு வழங்குவது தொடர்பிலும் கடந்த காலங்களில் அமைச்சர்கள் பல்வேறு நடைமுறைகளை அறிமுகப்படுத்திய போதிலும் அவை செயலுருப்பெறவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் பங்களிப்புச் செய்யும் மீனவர்களின் உயிர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதெனவும் அகில இலங்கை பொது மீனவ சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை தமது படகுகளை காப்புறுதி செய்யாத மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்காதிருக்க கடற்றொழில் அமைச்சு தீர்மானித்துள்ளது.

மீனவர்கள் உயிர்பாதுகாப்பு அங்கிகளை அணிய வேண்டியதை கட்டாயமாக்குவதற்கான சட்ட ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருவதாக பிரதி கடற்றொழில் அமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவித்துள்ளார்.

# உத்தேச அரசியல் யாப்புக் குறித்து முஸ்லிம் காங்கிரஸ்டன் பேச்சு

### ஐ.தே.க. அறிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் உத்தேச அரசியல் யாப்புக் குறித்து, விரைவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்டன் பேசப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச அரசியல் யாப்புக் குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு தரப்பிடம் இருந்து கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்த விவாதத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் இணைத்துக் கொள்ளத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 13 ஆம் திருத்தச் சட்டத்தின் மீதான சீராக்கல்கள் மற்றும், மாகாண அதிகாரங்களை கைப்பற்றுதல் போன்ற விடயங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்ற நிலையில், அதிகாரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் யாப்பு குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அக்கறை செலுத்தலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் ஓரிரு தினங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரநிதிகள் குழு ஒன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சந்திக்கும் என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

# பொதுக்கூட்டம்

(அல்வாய்)

அல்வாய் வடக்கு நக்கீரன் சிக்கன கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் 22 ஆவது வருடாந் தப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு குச்சம் ஞான வைரவர் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் இ.கணேசன் தலைமையில் நடைபெ றும் இக்கூட்டத்தில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் செ. இலகுநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளர் ச.பரமானந்தம், பருத்தித்துறை பிராந்திய தலைவர் பா.ரகுநாதன் சமாசப் பணிப்பாளர் ச.ஜெயக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

# கிளிநொச்சியில் காணிக்கச்சேரி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர கிராம அலுவலர் பிரிவில் எதிர்வரும் 21 ஆம் திகதி காணிக்கச்சேரி நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி நகர கிராம அபிவிருத்திச் சங்கத்தினர அறிவித்துள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தக் காணிக் கச்சேரியில் காணி உரிமையாளர்களுக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே காணி உரிமையாளர்கள் உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்குமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி நகர் கிராம அலுவலர் பிரிவில் நூற்றுக் கணக்கான காணி உரிமையாளருக்கு இதுவரை காணிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை என்பதுவும் ஒருகாணிக்கு பலர் உரிமை கோரும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் காணிப்பிரச்சினைகளுக்கான பல வழக்குகளும் நீதிமன்றில் விசாரணையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

> சின்னப்பா மாஸ்ரர் என்பவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்தால் பல அரச அதிகாரிகளுக்கு தலையிடி தானாகவே சொல்லாமல் கொள்ளாமல் வந்துவிடும். அந்தளவிற்குஅரச அதிகாரிகளுடன் கடுமையாக நடந்து கொண்டே தமது காரியங்களை சின்னப்பா மாஸ்ரர் நிறைவேற்றி வந்தார். குறிப்பாக அரச அதிகாரிகளின் இடமாற்றம், புதியநியமனங்கள், புதிய வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் வேலைத் திட்டத்தை சின்னப்பா மாஸ்ரரே மேற்கொண்டு வந்தார்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 43

**வே. அர்ச்சுணன்**

புலிகளின் கட்டமைப்பில் தமிழீழ நிர்வாக சேவை முக்கியமான ஒரு கட்டமைப்பாக இருந்த போதும் இறுதிக்காலப் பகுதியில் மக்கள் மீதான அதிருப்தியை சந்திப்பதில் தமிழீழ நிர்வாக சேவை பிரதான இடத்தை வகித்தது. குறிப்பாக மக்கள் மீதான கடுமையான சட்டங்களை நடைமுறைப்படுத்தியமை மக்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை பொறுப்பெடுத்து பல திட்டங்களை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போட்டமை போன்ற செயற்பாடுகளை தமிழீழ நிர்வாக சேவை மேற்கொண்டு வந்தமை மக்கள் இந்த பிரிவின் மீது வெறுப்படைய காரணமாகியது. குறிப்பாக மக்கள் மீதான வாழ்வாதார திட்டங்கள் சிலவற்றை இவர்கள் நடைமுறைப்படுத்திய போதும் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட பல திட்டங்களில் இவர்கள் கை வைத்தமையால் பெரும் நெருக்கடியர்ன சூழலை புலிகள் இயக்கம் சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

குறிப்பாக சின்னப்பா மாஸ்ரர் என்பவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அழைப்பு விடுத்தால் பல அரச அதிகாரிகளுக்கு தலையிடி தானாகவே சொல்லாமல் கொள்ளாமல் வந்துவிடும். அந்தளவிற்கு அரச அதிகாரிகளுடன் கடுமையாக நடந்து கொண்டே தமது காரியங்களை சின்னப்பா மாஸ்ரர் நிறைவேற்றி வந்தார். குறிப்பாக அரச அதிகாரிகளின் இடமாற்றம், புதிய நியமனங்கள், புதிய வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் வேலைத்திட்டத்தை சின்னப்பா மாஸ்ரரே மேற்கொண்டு வந்தார்.

அதாவது புலிகள் இயக்கத்தின் மீது கடுமையான விசுவாசத்துடன் சின்னப்பா மாஸ்ரர் செயற்பட்டு வந்தபோதிலும் சின்னப்பா மாஸ்ரர் தொடர்பில் குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டு அவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டதுடன் முடிவில் அவரை பங்கரில் போட்டு ஒரு வாரத்திற்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டு தண்டிக் கப்பட்டிருந்தார். இந்த நிலையில் இவர் தொடர்பான குற்றம் உறுதி செய்யப்படாத நிலையில் இவரை உடனடியாக பங்கரில் இருந்து எடுத்து தன்னைச் சந்திப்பதற்கு அழைத்து வருமாறு புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளரான சு.ப.தமிழ்ச்செல்வன் தன்னுடன் நின்ற போராளிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

சின்னப்பா மாஸ்ரரிடம் சென்ற அரசியல் துறையினர் அவரை பங்கரில் இருந்து வெளியில் எடுத்து நன்றாக குளிக்க வைத்து விட்டு இன்ரகூலர் வாகனத்தில் அரசியல் துறை தலைமைச் செயலகத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே காத்திருந்த தமிழ்ச்செல்வன் தனது வழமையான பாணியில் சிரித்த முகத்துடன் சின்னப்பா மாஸ்ரரை ஆரத்தழுவி அரவணைத்து ஆறுதல் கூறியதுடன் பிழையான தகவலை வைத்துக் கொண்டு பெடியள் பிழையாக நடந்துவிட்டாங்கள் இதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கின்றேன். இதை நீங்கள் பெரிதாக எடுக்க வேண்டாம். உங்களது பணியை தொடர்ந்து திறம்பட செய்யுங்கள். தலைவரும் இதையே உங்களிடம் எதிர்பார்க்கின்றார். உங்களிற்கு நடந்த விடயம் தொடர்பில் நான் தலைவரிடம் குறிப்பிட்ட போது அவர் மிகுந்த கவலையடைந்ததுடன் உங்களை உடனடியாக வெளியில் எடுத்து முன்னர் இருந்ததை விடக் கூடுதலான பொறுப்புகளுடன் பணிக்கு அமர்த்துமாறு கூறியிருக்கிறார். அத்துடன் உங்களிற்கு இயக்கம் வழங்கியுள்ள மோட்டார் சைக்கிளை வாங்கிவிட்டு பிக்கப் வாகனம் ஒன்றை வழங்குமாறும் என்னிடம் தெரிவித்தார் எனக் கூறி பிக்கப் வாகனத்தின் திறப்புக் கோர்வையையும் சின்னப்பா மாஸ்ரரிடம் தமிழ்ச்செல்வன் கையளித்தார்.

ஆனால் சின்னப்பா மாஸ்ரர் தனக்கு நடந்த நிலைமையை எண்ணி மனம் வருந்திக் கதைத்து விட்டே கண்ணீர் மல்க தமிழ்ச் செல்வனிடம் இருந்து விடைபெற்றுச் சென்றார். ஏற்கனவே தன்னை பங்கரில் போடுமாறு உத்தரவு பிறப்பித்திருந்தது தமிழ்ச்செல்வனே என்பதை சின்னப்பா மாஸ்ரர் அறிந்திருந்தார். கீழ்மட்ட அரசியல்துறையினர் சின்னப்பா மாஸ்ரரை டீல் பண்ணவோ அல்லது அவருக்கு தண்டனை வழங்கவோ முடியாது. ஏனென்றால், அரச அதிபர்களிலிருந்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் வரை எத்தனையோ பெரிய பெரிய கல்விமான்களை டீல் பண்ணுகின்ற சின்னப்பா மாஸ்ரரை சாதாரண-மான அரசியல் துறை போராளிகள் ஒருபோதுமே டீல் பண்ண முடியாது. அந்தளவிற்கு சின்னப்பா மாஸ்ரர் இயக்கத்தின் நிர்வாக சேவை கட்டமைப்பில் முக்கியமான இடத்தைப் பிடித்திருந்தார்.

இந்த நிலையில் தனக்கு நடந்தது தமிழ்ச்செல்வன் அல்லது தலைமைப்பீடத்திற்கு தெரியா-மல் ஒருபோதுமே நடந்திருக்க வாய்ப்பில்லை என்பதை நடைமுறையில் உணர்ந்து கொண்டார். இருந்த போதிலும் இயக்கம் இறுதியில் தன்னில் பிழை இல்லை என்பதை உணர்ந்து கொண்டு தனக்கு முக்கிய பொறுப்பையும் பதவியையும் அத்துடன் வாகனத்தையும் வழங்கியதையிட்டு மனதில் ஓரளவு தெம்பை வரவழைத்துக் கொண்ட சின்னப்பா மாஸ்ரர் முள்ளிவாய்க்கால் முடிவுகள் வரை இயக்கத்துடன் விசுவாசமாகவே நடந்து கொண்டார். ஆனால் இறுதிக்கட்டத்தில் புலிகள் முடிவெடுக்க முடியாமல் திண்டாடிக்கொண்டிருந்த போது சின்னப்பா மாஸ்ரர் மக்களோடு மக்களாக இணைந்து படையினரால் பராமரிக்கப்பட்டு வந்த இடைத்தங்கல் முகாம்களில் ஒன்றான ராமநாதன் முகாமில் உள்ள 4ஆம் பிளக்கில் 39ஆம் இலக்க கொட்டிலில் தஞ்சமடைந்திருந்தார்.

இவ்வாறு அங்கே தஞ்சமடைந்திருந்த சின்னப்பா மாஸ்ரரை மக்கள் இலகுவில் அடையாளம் காண முடியாத நிலைமையே காணப்பட்டது. ஏனெனில் அவர் சாதாரண பொதுமகன் போன்று செயற்பட்டதுடன் தனது வெளி நடமாட்டங்களையும் குறைத்து தொடர்ந்து முகாமுக்குள்ளேயே இருந்தவாறு தனது அடுத்த கட்ட செயற்பாடு பற்றிச் சிந்தித்து வெளியில் இருந்தவர்களுடன் மிக இரகசியமாகவே தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டார். படையினரின் பாதுகாப்பு பொறி முறையையும் உடைத்துக் கொண்டு, முகாமுக்கு தண்ணீர் எடுத்து வரும் கொள்கலனில் ஏறி வெளியில் தப்பிச் சென்ற சின்னப்பா மாஸ்ரர் இதன் பின் உடனடியாகவே சிங்கப்பூரிற்கு விமானம் மூலம் தப்பிச் சென்றார். தற்போது மேற்குலக நாடு ஒன்றில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அனுசரணையுடன் அதன் வேலைத்திட்டத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு செயற்பட்டு வருவதாக சில தகவல்கள் சொல்கின்ற போதும், இவர் சிங்கப்பூரை விட்டு வெளி-யேறி விட்டாரா, மேற்குலகநாட்டின் எந்த நாட்டில் வாழ்கின்றார் என்ற உறுதியான தகவல்கள் எவையும் இல்லை.

இருப்பினும் இவர் வன்னியில் இருந்து செயற்பட்ட காலப்பகுதியில் அனைவரின் விருப்பத்திற்குரிய ஒரு மனிதராக செயற்படவில்லை என்ற வரலாற்றுப் ப்திவு மாறாத பதி-வாகவே இருக்கின்றது. சின்னப்பா மாஸ்ரருடன் நெருங்கிப் பழகியதில் புலிகளின் விளையாட்டுத் துறை பொறுப்பாளராகவிருந்த கி.பாப்பா என்பவரும் முக்கியமான ஒரு-வராவார். அதாவது துறை சார்ந்த பல கட்டமைப்புக்களை புலிகள் பேணிவந்துள்ளனர். அவற்றில் சில சாதகமாக இருந்த போதும் சில கட்டமைப்புகள் பாதகமரகவே இருந்துள்ளன. அதாவது பாதகமாக இருந்த கட்டமைப்புக்களின் ஒன்றான தமிழீழ நிர்வாக சேவையின் கட்டமைப்பை பார்த்த நாம் அடுத்து தமிழீழ விளையாட்டுத் துறையின் கட்டமைப்பை பார்க்க வேண்டிய தேவையும் உள்ளது. புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விளையாட்டுத் துறை தொடர்பாகவும் அதன் பொறுப்பாளர் தொடர்பாகவும் எப்போதும் நகைச்சுவையாக ஒன்றைக் குறிப்பிடுவார். அவர் என்ன குறிப்பிட்டார் என்பதைப் பார்ப்பதற்கு முன்னர் தமிழீழ நிர்வாக சேவையின் மேலதிக செயற்பாடுகள் சிலவற்றையும் தொடர்ந்து பார்ப்பதோடு, இவற்றை தமிழ் ஊடகங்கள் எவ்வாறு பார்த்தன என்பது தொடர்பிலும் கவனிப்போம்.



(தொடரும்)

# அரபு வசந்தம் போன்ற எழுச்சிகள் இலங்கையில் ஏற்படமாட்டாது

## கூறுகிறார் பாதுகாப்புச் செயலாளர்



இலங்கையில் அரபு வசந்தம் போன்ற எழுச்சி ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை யென பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித் துள்ளார். மிகவும் விருப்பத்திற் குரிய அரசியல் தலைமைத்துவம் கொண்ட ஜனநாயக நாடாக இலங்கை காணப்படுகிறது.

இதனால் அரபு வசந்தம் போன்ற எழுச்சிக்கான தேவை இல்லையென அவர் குறிப்பிட் டுள்ளார். எனினும் சமூக வலைத் தளங்கள் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான ஆற்றல்களைக் கொண்டுள்ளன.

டுனீசியா, லிபியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் உருவான மக்கள் எழுச்சிக்கு சமூக வலைத்தளங்களே அடித்தளமிட்டதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு அதிகளவான ஆளணி தேவையில்லை. இவ்வாறான குழப்பவாதிகளை பாரம்பரிய பாதுகாப்பு முறையினால் கட்டுப்படுத்த முடியாது. இதனால் புலனாய்வு அமைப்புக்கள் ஒன்றிணைக்கப்பட்ட கட்டளை அடிப்படையின் கீழ் பணி புரிவது அவசியமென பாதுகாப்புச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவது முக்கியம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. வீடோ அதிகாரமுள்ள குறித்த நாடுகள் இலங்கை மீதான சர்வதேச நடவடிக்கைகளின் போது தமது செல்வாக்கைப் பூரண படுத்தி இலங்கையை பாதுகாக்குமெனவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# உயர்நீதிமன்ற வாயிலில் இலத்திரனியல் விளம்பரம்

வழக்கு விபரங்கள் தொடர்பில் மக்கள் தெரிந்துகொள்வதற்காக உயர்நீதிமன்றத்தில் இலத்திரனியல் விளம்பரப் பலகையை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வழக்குகள் தொடர்பிலான விபரங்களே இவ்வாறு விளம்பரப்படுத்தப்படவுள்ளன.

உயர்நீதிமன்றத்தில் வாயிலிலேயே இந்த இலத்திரனியல் விளம்பரப் பலகை பொருத்தப்படவுள்ளது. அதில் ஒவ்வொரு நாட்களும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழக்குகள், விசாரணை நடைபெறும் அறையின் இலக்கம், நீதியரசர்களின் விபரங்கள் போன்றவற்றை பார்வையிட முடியும். பிரதம நீதியரசர் மொஹான பீரிஸின் பணிப்புரையின் பேரிலேயே இந்த விளம்பரப் பலகை பொருத்தப்படவுள்ளது.

# இலவசக் கல்வி இல்லையெனில் உயர்கல்வி அமைச்சர் விவசாயி

## என்கிறது ஜே.வி.பி.

இலங்கையில் இலவசக் கல்வி என்பது நடைமுறையில் இல்லாமலிருந்திருந்தால் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க விவசாயியாகவே இருந்திருப்பார் என மக்கள் விடுதலை முன்னணி குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலவசக் கல்வி இல்லையென்றால் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க ஆகியோரது கருத்துக்களுக்கு மதிப்பில்லாமல் சென்றிருக்கும். இலவசக் கல்வி என்பது இருப்பதால்தான் அவர்கள் இன்று ஒரு அமைச்சர்களாக இருக்கின்றார்கள் என்றும் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியினரின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "இவ்வாறானவர்கள் இன்று இலவசமாக பெற்றுக்கொள்ளும் கல்விசார் பட்டங்களை 150,000 ரூபாய்க்கு விற்பவர்களாக உள்ளனர். இதனூடாக இன்று இலவசக் கல்வி என்பது அழிக்கப்படும் ஒன்றாக மாறியுள்ளது.

இலவசக் கல்வியை நடைமுறையில் இல்லாமல் செய்யும் முயற்சிக்கு எதிராக கருத்துத் தெரிவித்த 214 பல்கலைக்கழக மாணவர்கள் இன்று பல்கலைக் கழகங்களிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்" என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# மூழ்கிய படகில் இலங்கையர் இல்லை



(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கு அப்பால் கடந்த வாரம் மூழ்கிய படகில் இலங்கையர் எவரும் காணப்படவில்லை என்று அவுஸ்ரேலிய அரசாங்கத்திடமிருந்து கிடைத்த அறிக்கை தெரிவிப்பதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

படகு ஒன்று கடந்த வாரம் அவுஸ்ரேலியாவுக்கு அப்பால் கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் இலங்கை அரசாங்கம், அவுஸ்ரேலிய அரசாங்கத்திடமிருந்து முழுமையான அறிக்கை ஒன்றை கேட்டிருந்தது.

அவுஸ்ரேலியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம், அவுஸ்ரேலிய சுங்க மற்றும் கரையோர பாதுகாப்பு பிரிவினருடன் தொடர்பில் இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

இருப்பினும் குறித்த படகில் இலங்கையர் எவராவது இருந்தனர் என்பதை அவுஸ்ரேலிய அரசாங்கம் உறுதி செய்யவில்லை.

# இரணைமடு ஓடுபாதை ஜனாதிபதியால் இன்று திறப்பு

இரணைமடு விமான ஓடுதளம் இன்றையதினம் திறந்து வைக்கப்படவுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விமான ஓடுதளத்தை திறந்துவைக்கவுள்ளார். இலங்கை விமானப் படையினரால் ஓடுதளம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இலங்கை விமானப்படை வரலாற்றில் விமானப் படையினரின் சக்தியைப் பயன்படுத்தி ஓடுதளம் நிர்மாணிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும். ஆயிரத்து 500 மீற்றர் நீளமும், 25 மீற்றர் அகலமும் கொண்டதாக விமான ஓடுதளம் அமைக்கப்பட்டுள்ளது.

பொறியியல், நிர்மாணம் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை விமானப் படை வழங்கியிருந்தது. விமானப்படை வசமுள்ள மிகப் பெரிய விமானமான சி-130 ரக விமானத்தையும் தரையிறக்க கூடிய விதத்தில் குறித்த ஓடுதளம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புலிகளிடமிருந்து இரணைமடு மீட்கப்பட்டதன் பின்னர் இரணைமடு ஓடுதளத்தை நிர்மாணிக்கத் தீர்மானிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு விமான ஓடுபாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தற்போது விமான ஓடுபாதை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் இந்த விமான ஓடுபாதையைத் திறந்து வைக்கவுள்ளார்.

# கடலுக்குச் செல்லும் மீனவர்கள் பதிவுசெய்வது கட்டாயம்

கடலுக்குச் செல்லும் மீனவர்களை பதிவு செய்துகொள்ளும் முறைமை கடுமையாக அமுல்படுத்தப்படவிருப்பதாக மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். மீனவர்கள் பதிவு செய்யப்படும்போது படகுகளில் உயிர்காப்பு அங்கிகள் கட்டாயப்படுத்தப்படுவதுடன் அனைத்து படகுகளையும் இயல்பாகவே காப்புறுதி திட்டத்திற்குள் உள்வாங்கும் வகையில் இச்செயற்திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படுமெனவும் அமைச்சர் கூறினார். கடந்த வாரம் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்றுமுன்தினம் நாடு திரும்பியுனார்.

இலங்கையில் மீனவர்கள் உயிரிழந்துள்ள சம்பவத்திற்கு அனுதாபம் தெரிவித்த அவர், இக்கொடூரமான சம்பவத்தை அடிப்படையாக வைத்து நீண்டகாலத் திட்டங்கள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்த விருப்பதாகவும் கூறினார்.

இதற்கு முன்னர் பல தடவைகள் அனைத்து மீனவர்களையும் காப்புறுதி செய்யுமாறு நாம் வற்புறுத்தியுள்ள போதும் அதில் கணிசமானவர்கள் மாத்திரமே அக்கறை செலுத்தியிருந்தனர்.

வருடத்திற்கு 750 ரூபாய் வீதமே காப்புறுதித் தொகை அறவிடப்படுகிறது. அந்த வகையில் மாதாந்தம் 60 ரூபா வீதமே செலுத்தப்பட வேண்டும். இவ்வாறான காப்புறுதித் திட்டத்தில் மீனவர்கள் தங்களை உள்வாங்கிக் கொள்வதன் மூலம் இவர்களுக்கும் இவர்களது பிள்ளைகளுக்கும் பல சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன என்றார்.

# 13 ஆவது சட்டத்தில் திருத்தம் ஆழ்ந்த கவலையில் இந்தியா

## என்கிறது நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்

(கொழும்பு)

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்வதற்கு அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது, இது இந்தியாவுக்கு ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளதாகச், நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முக்கியமான இந்த அரசியலமைப்புத் திருத்தத்தை நீர்த்துப் போகச் செய்யும் முயற்சிகள், வடக்கு மாகாணசபைத் தேர்தல் மீதான நம்பகத்தன்மையின் மீது நிழலைப் படியச் செய்துள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாணசபைகளின் அதிகாரங்கள் எந்த வகையிலேனும் குறைக்கப்பட்டால், தாம் தேர்தலைப் புறக்கணிக்க நேரிடும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஏற்கனவே பகிரங்கமாக எச்சரித்துள்ளனர்.

அது அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தை நீர்த்துப்போகச் செய்ய நடவடிக்கை எடுத்தால், பதிலடியான நடவடிக்கையாக அமையும் என்றும் இந்திய அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் தேர்தலை நடத்தப் போவதாக அனைத்துலக சமூகத்திடம் கூறிக்கொண்டே, இன்னொரு பக்கத்தில் கொழும்பு மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன.

மூன்று வாரங்களுக்கு முன்னர், மாகாண சபைகளின் காணி, காவல்துறை அதிகாரங்களைப் பறிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தகவல்கள் வெளியான போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசை தொலைபேசியில் அழைத்து பேசியிருந்தார்.

இதன்போது, 13 ஆவது திருத்தத்தின் கீழ் உள்ள அதிகாரங்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்று சல்மான் குர்ஷித் வலியுறுத்தியிருந்தார்.

இதனால், அரசாங்கம் தனது உத்தியை மாற்றிக்கொண்டு, 13 ஆவது திருத்தத்தில் உள்ள குறைந்த உணர்வு சார்ந்த விவகாரங்களை நீர்த்துப் போகச்செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மீள்குடியேறிய மக்களுக்கே வீட்டுத்திட்டம் வழங்கப்படும்



(கிளிநொச்சி)

மீள்குடியேற்றம் நடைபெற்ற பகுதிகளில் இதுவரை வீட்டுத் திட்டங்களைப் பெறாத மக்கள் நிரந்தரமாக மீள்குடியேறுகின்ற சந்தர்ப்பத்திலேயே வீடுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் இதுவரை வீடுகளைப் பெறாத மக்களின் பிரச்சினைகளை ஆராயும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று மக்கள் மீள்குடியேறிய பகுதிகளில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள அதேவேளை, நிரந்தர வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளை நிரந்தர முகவரியாகக் கொண்டுள்ள பலர் இதுவரை மீள்குடியேறாதுள்ளனர். அவ்வாறானவர்கள் இன்றுவரை வீட்டுத்திட்டங்களை பெறமுடியாதுள்ளனர். எனவே மக்கள் பல்வேறு தேவைகருதி தற்காலிகமாக வேறுபகுதிகளில் வசித்து வருகின்றபோதும் வீட்டுத்திட்டங்களை வழங்குவதற்கான சட்ட விதிமுறைகளுக்கமைவாக நிரந்தரமாக மீள்குடியேறுகின்ற சந்தர்ப்பத்திலேயே அவர்களுக்கான வீட்டுத்திட்டங்களை வழங்கமுடியும்.

இதனைக் கருத்தில் கொண்டு மீள்குடியேற்றம் நடைபெற்ற பகுதிகளில் மக்கள் நிரந்தரமாகக் குடியேறவேண்டும். ஏனெனில் நிரந்தரமான வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இன்று உருவாகியுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள அனைத்து மக்களும் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் சத்தியசீலன், சுவிஸ் வீட்டுத்திட்டத்தின் திட்ட முகாமையாளர் அலைக்சான்றோ, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரதித் திட்டப்பணிப்பாளர் ஜெயக்குமார் ஆகியோரும் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இதுவரை வீட்டுத் திட்டங்களைப் பெறத்தவறிய மக்களும் கலந்துகொண்டனர்.

# மருத்துவமுகாம்

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவ வசதிகளற்ற ஊற்றுப்புலம கோணாவில் செல்வா நகர் முறிப்பு ஆகிய கிராமங்களைச் சோந்த மக்களின் நலன்கருதி தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்தால் பல மருத்துவர்கள் அடங்கிய மருத்துவ முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இம்மருத்துவ சேவை முறிப்பு சலோம் நகர் திருச்சபை ஆலய மண்டபத்தில் பாற்பண்ணை அருகாமையில் நடைபெறவுள்ளது. டாக்டர் தயாளினி தியாகராசா தலைமையிலான வைத்திய குழுவினரால் சகல நோய்களுக்குமான சிகிச்சைகள் வழங்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கும் ஏற்பாட்டாளர்கள் இக்கிராம மக்களை இம் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுள்ளார்கள். (112)

## டெங்குத் தாக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஒருவார காலத்தில் டெங்கு நோய்த்தாக்கத்திற்குள்ளாகிய நிலையில் இருவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டிருப்பதாக அவ்வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சங்கானை சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவரும் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவருமாக இருவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் இந்த மாதம் இதுவரையான காலப்பகுதிக்குள் 11 பேரும் இந்த வருடத்தின் இதுவரை 325 பேரும் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

## சிரமதானப்பணி

வடவரணி கூழாநின்ற புலத்து ஆலய உற்சவத்தை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை 16.06.2013 புனரமைப்பு வேலைகள் மற்றும் சிரமதானப் பணிகள் நடைபெறவுள்ளது. அடியார்கள் அனைவரையும் சமூகமளித்து தமது ஒத்துழைப்பை வழங்குமாறு. ஆலய நிர்வாக சபையினர் கேட்டுக்கொள்கின்றனர். (150)

# லலித், குகன் வழக்கு மீளவும் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2011ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டு காணாமற் போயிருந்த மக்கள் போராட்ட இயக்கத்தின் உறுப்பினர்களான் லலித், குகன் ஆகியோர் தொடர்பான வழக்கு விசாரணை யாழ்.நீதவான் நீதிமன்றத்தினால் நடைபெற்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமற் போயிருந்த இவ்விருவரையும் மீட்டுத்தருமாறு கோரி யாழ். நீதவான் நீதிமன்றத்தில் குகனின் மனைவி மற்றும் லலித்தின் தந்தை ஆகியோர் இந்த வழக்கினை தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்கு விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நீதவான் நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் முன்னணி சோசலிசக் கட்சியின் உறுப்பினா ஜனப்பிரிய குமாரகே தமது சாட்சியத்தை வழங்கினார். இவரது சாட்சியத்தை அடுத்து இந்த வழக்கு விசாரணையை யாழ். நீதவான் நீதிமன்றம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

இந்த வழக்குவிசாரணையின் போது லலித்தின் தந்தை சமூகமளித்திருந்ததுடன் குகனின் மனைவி சமூகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(பா)

## இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடமேற்கு ஆனைக்கோட்டை கண்ணகைபுரம் திருவருள் மிகு கண்ணகை அம்மன் என அழைக்கப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய இரதோற்சவத்திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் ஆலய மகோற்சவம் கடந்த 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று வருவதுடன் 19ஆம் திகதி புதன்கிழமை மாலை 7.30 மணிக்கு கைலாசவாகனத்திருவிழாவும், 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு சப்பரத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. மேலும் எதிர்வரும் 23ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும், மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு விஷேட கடன் திட்டம் ஒன்றை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் பான் ஏசியா வங்கியினர் அறிமுகப்படுத்தவுள்ளனர்.

யாழ்.இந்துக் கல்லூரியின் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறும். இதில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ்.பிராந்திய ஓய்வூதியர்கள் கேட்டுகொள்ளப்படுகின்றனர். (23)

## முரசின் இன்றைய பலன்




(15.06.2013 – சனிக்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 01ஆம் திகதி. மகம் முற்பகல் 9.13 வரை பின் பூரம். ஷஷ்டி திதி முற்பகல் 6.39 வரை பின் அமிர்த சித்தம். கரிநாள். இராகுகாலம் 08.53 - 10.23 வரை. சுபநேரம் 02.53 - 04.23 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களாகணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நட்புப்பிரிவு மனதை வாட்டல், சரீர காந்தி குன்றுதல், களத்திரத்தின் உதவி, முழுயுந்தறுவாயில் இருந்த விவாகப்பேச்சு குழம்புதல், பிறரால் உபகாரம் கிடைத்தல், அனுமதிக்காக பச்சைக்கொடி காட்டுதல், வயிற்றில் ரோகம், பலக் குறைவு பிரிந்திருந்தது ஒன்று சேரல். |
| ரிஷபம் | பங்குத் தொழிலைக்கைவிட தீர்மானிப்பு, சயன போஜன மகிழ்ச்சி, புத்திரர் மனைவியால் சஞ்சலம் நீங்குதல், தொழில் விருத்தி, பாவச் செயலில் பற்று நீக்கம், சிநேகித உதவி, விஷம் சத்துருபற்றிய பயம், விரும்பியது கை கூடாமை பெரியோர் மதிப்பு. |
| மிதுனம் | உல்லாசப் பயணத்திற்கு திட்டமிடல், கடன் காரரின் நஞ்சரிப்பினால் தொலைபேசி யின் "சிம்" மாற்றுதல், வன்னியில் முதலிட ஆர்வம் பிறத்தல், காரிய சித்திக்கு தந்திரத்தைக் கையா ளல், மாதவிலக்கினால் தொல்லை, வைத்த நம்பிக்கை வீண் போகாமை, புதிய ஜீவன் ஜனனம், சுடலை ஞானம் பிறத்தல், உல்லாசப் பயணம். |
| கடகம் | நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு, பெற்ற கடனுக்கு வட்டி கட்டல், பெட்டீசத்தினால் மனச்சஞ்சலம், நம்பி இருந்தவர் காலைவாரி விடுதல், வாகனம் ஓடிப்பழக ஆசைப்படுதல், வாழைப்பழத்தோல், எண்ணெய் சறுக்கி அங்கப்பழுது, விவாரணையின் மூலம் மணமக்களின் குணப்பண்பறிதல். |
| சிம்மம் | காணாமற் போன பொருளைத் தேடும் முயற்சி, இடப்பக்க மூட்டில் வலி, பிதாவின் உடல் நிலை முன்னேற்றம், மின் ஒழுக்கால் கெடுதி, கையடக்கத்தொலைபேசி காதல் உறவு ஆபத்தின் ஆரம்பம், வர்த்தக நிலையம் திறக்க எண்ணம், கடன் பட்டு நெஞ்சு கலக்கம், சுவீப் அதிர்ஷ்டமுண்டு. |
| கன்னி | சுபகாரியங்களுக்குச் செலவு, பிள்ளை ஒன்றின் செய்கையினால் மனக்கிலேசம், தொழிலை நம்பி பயணம் கைவிடல், சயன சுகம், நீர்க்கண்டத்தினின்றும் அருந்தப்பு, அநாமய தேய தொலைபேசிச் செய்தியால் பயப்பிராந்தி, திருமண நிச்சயார்த்தம் சரிவரல். |
| துலாம் | போலி முகவரை நம்பி நட்டமடைதல், நண்பரால் உதவி, நீண்ட நாள் செய்தி ஒன்று மகிழ்வைத்தரல், தெய்வதல மொன்றுக்கு விஜயம் உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேச வெளிக்கிடல், வாகனத்திருத்தம், கடனை அடைக்க நகைகளை அடகு, பூப்படைதல். |
| விருச்சிகம் | பரிசோதனைக் குழுவினால் தில்லு முல்லுகள் வெளிப்படல், பயணத்திகதி ஒத்தி வைப்பு, பேச்சினால் பாராட்டு, செய்யாத குற்றத்திற்கு தண்டம், துணைக்குச் சென்று அவமானப்படல், கடன் கொடுத்து வேதனைப்படல், சீளி நோய் வருத்தல், வாகனப் பாதுகாப்பின்மையினால் அதிர்ச்சி. |
| தனுசு | திதி அறிய சோதிடரை நாடல், பூர்விகச் சொத்துப் பற்றிய பிரச்சினை, விவாகப் பேச்சு கவலையில் முடிதல், எதிரியினால் திருடரால் கெடுதி, உடையதை விளம்பி மனச்சஞ்சலம், தொழிலில் இடையூறுகள், கடன் பெற்றதால் தொல்லை சூழல், பிறரால் ஏமாற்றம், வயிறு மார்பில் வலி, தடுமாற்றம். |
| மகரம் | பிரயாணமுகவரால் கெடுதி, வங்கியாலும் மோசடி, அறாவிலைக்கு பொருட்களை விற்கும் நிலை, புதிய மனை அமைக்க உத்தேசம், விபத்தினால் வலப்பக்க உறுப்பு பாதிப்பு ஒவ்வாமை ஏற்படல், சுபகாரியத்திற்கு செலவு, கரிநாளென்று பிரயாணத்தை கைவிடல், மகிழ்ச்சி தாண்டவம். |
| கும்பம் | பிரயாணத்தினால் சலிப்பு, பணப்பற்றாக் குறை, வாக்குக்கலகம், தொலைந்த ஆவணம் வந்தடைதல், மேலதிகாரியின் கருணை, வாக்கினால் வசீகரம், மார்புச்சளியினால் வருந்தமடைதல், இராசமதிப்பு, வற்புறுத்தி பணியவைத்தல் சுப செய்தி ஒன்று கேட்டல். |
| மீனம் | திருட்டுப்போனது சேரல், புதியன கொள்ள செலவு பயணத்திற்கான ஏற்பாடு, வாடகைக்கு மனை தேடி அலைதல், காலாவதியான பொருள் பெற்று கவலை, புலமைப்பரிசில் பற்றிய மகிழ்ச்சியான செய்தி, பித்தத்தினால் தேக நிலை பாதிப்பு சுவீப்பில் பணம் அள்ளுதல். |


## மன்னிக்க வேண்டுகிறேன்



இங்கிலாந்து வீரர் ஜோ ரூட்டுன் கைகலப்பில் ஈடுபட்டமைக்காக அவுஸ்ரேலிய அணி வீரர் டேவிட் வோர்னர் மன்னிப்புக் கோரியுள்ளார்.

பேர்மிங்ஹாமிலுள்ள மதுபான விற்பனை நிலையமொன்றில் வைத்து ஜோ ரூட்டின் முகத்தில் வோர்னர் தாக்கியிருந்தார்.

இதனையடுத்து ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் வரை போட்டிகளில் விளையாட அவருக்கு அவுஸ்ரேலிய கிரிக்கெட் நிறுவனம் தடைவிதித்தது. இதன்காரணமாக சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் ஏனைய போட்டிகளில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.



## அதிகரிக்கும் ஒற்றுமை

(லண்டன்)

மதுபான நிலையத்தில் தகராறு செய்த அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள சம்பவத்தால், ஆஸி. அணி வீரர்களிடையே ஒற்றுமை அதிகரிக்குமென முன்னாள் நட்சத்திர சுழற் பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நடந்த சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தச்சர்ச்சையால் ஆஸி. அணி வீரர்களிடையே முன்னெப்போதையும் விட ஒற்றுமை அதிகரிக்கும் என நம்பு கிறேன்.

அவர்கள் ஒருங்கிணைந்து விளையாட இந்தச் சம்பவம் உதவும். அணிக்காக சாதிக்க விரும்புவது என்ன என்பதை தங்களுக்குள் ஆலோசித்து தெளிவுபடுத்திக் கொள்வது முக்கியம். ஆஸி. வீரர்கள் நிலைகுலைந்து போவார்கள் என இங்கிலாந்து நினைத்தால், ஆஷஸ் தொடரில் அவர்களுக்கு எதிர்பாராத அதிர்ச்சி காத்திருக்கிறது என்பது உறுதி.

டேவிட் பூன், அலன் போர்டர், இயன் ஹீலி போன்ற அனுபவ வீரர்களுடன் விளையாடியபோது எனக்கு மிகவும் இள வயது. அப்போதெல்லாம், பேருந்தில் ஏறுவதற்கு சற்று தாமதமாக வந்தால் கூட மிகக் கடுமையாகக் கடிந்துகொள்வார்கள். மிகவும் சங்கடமாக இருக்கும். இன்றைய வீரர்கள் போட்டி நடக்கும் சமயத்தில் ஒழுக்கத்தைக் கட்டிக் காப்பது அவசியம். சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் கப்டன் மைக்கல் கிளார்க் காயம் காரணமாக விளையாட முடியாதது ஆஸி. அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




## முதன் முதலாக

(மொஸ்கோ)

ரஷ்யாவில் முதல் முறையாக 2018 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கால் பந்து தொடர் நடைபெறவுள்ளது. ஜூன் 8ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு மாதம் போட்டிகள் நடைபெறவுள்ளன. உலகம் முழுவதிலும் உள்ள 32 அணிகள் பங்கேற்று விளையாடும் இப்போட்டிக்காக 12 மைதானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தப்போட்டிகளை சிறப்பாக நடத்த ஆர்வமாக உள்ள ரஷ்ய அரசு, அதற்கான நிதியை தாராளமாக வழங்க முன்வந்துள்ளது. உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளை நடத்துவதற்கு 20 பில்லியன் டொலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.1 இலட்சத்து 16 ஆயிரம் கோடி) செலவு செய்ய உள்ளதாக ரஷ்ய பிரதமர் திமித்ரி மெத்வதேவ் தெரிவித்தார்.

இது 2010ஆம் ஆண்டு அவர் புதிய பிரதமராக இருந்தபோது செலவு செய்ய முன்வந்த தொகையைவிட (10 பில்லியன் டொலர்) இரு மடங்காகும். இது தொடர்பாக மெத்வதேவ் தனது அமைச்சரவையில் பேசுகையில், உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்காக வரும் பட்ஜெட்டில் 13 பில்லியன் டொலர்கள் ஒதுக்கப்படும் என்றார். மீதித் தொகை எந்த வழியில் விடுவிக்கப்படும் என்று அவர் குறிப்பிடவில்லை.

இதேபோல்,2014ஆம் ஆண்டு ரஷ்யாவின் சோச்சி நகரில் நடைபெற உள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்காக அரசு 51 பில்லியன் டொலர் செலவு செய்ய உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அனுமதியளித்தது இந்தியா

(புதுடில்லி)


2017ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்து சம்மேளனம் பிபா உலகக் கோப்பை கால்பந்துத் தொடரை, இந்தியாவில் நடத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

1985ஆம் ஆண்டு முதல், இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை, பிபா சார்பில் 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கால்பந்துத் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. 2017இல் 17ஆவது தொடரை நடத்த, ஜனவரி மாதம் இந்திய கால்பந்து கூட்டமைப்பு (ஏ.ஐ.எப்.எப்.,) விண்ணப்பம் செய்தது.

பிபா கேட்டிருந்த வரி விலக்கு, பாதுகாப்பு, வீரர்களுக்கான போக்குவரத்து மற்றும் தங்கும் வசதி, விசா உள்ளிட்ட உத்தரவாதங்களை இந்திய மத்திய அரசு அளிக்காததால், முதலில் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

பிபாவின் நிபந்தனைகளுக்கு அனுமதி தருமாறு, ஏ.ஐ.எப்.எப்., மத்திய அரசுக்கு கடிதம் எழுதியது. நேற்று முன்தினம் டில்லியில் நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பிபா அமைப்பு கேட்டிருந்த உத்தரவாதங்கள் மற்றும் நிதி உதவிகள் அளிப்பதாகவும், மத்திய அரசு ஒப்புதல் தெரிவித்தது. இதையடுத்து ஏலத்தில் பங்கேற்க ஏ.ஐ.எப்.எப்., விரைவில் விண்ணப்பிக்க உள்ளது. ஏற்கனவே இந்த ஏலத்தில் அயர்லாந்து, உஸ்பெகிஸ்தான், தென்னாபிரிக்க நாடுகள் பங்கேற்கின்றன.

இந்திய கால்புந்து கூட்டமைப்பின் தலைவர் பிரபுல் படேல் கூறுகையில், 2017இல் 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பைத் தொடரை நடத்த மத்திய அரசு அனுமதி அளித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதன்மூலம் இந்தியாவில் கால்பந்து போட்டி வளர்ச்சி அடையும். ஏலத்தில், இத்தொடரை நடத்தும் உரிமம் இந்தியாவுக்கு நிச்சயம் கிடைக்கும் என்றார்.




## வென்றார் உசைன் போல்ட்

ஒஸ்லோவில் நடைபெற்ற டயமன் லீக் 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்காவின் உசைன் போல்ட் வெற்றியீட்டியுள்ளார்.

19.79 செக்கன்களில் போட்டித் தூரத்தை உசைன் போல்ட் பூர்த்தி செய்ததுடன், இவ்வாண்டின் 200 மீற்றர் ஓட்டத்திற்கான சிறந்த காலப் பிரதியாகவும் இது பதிவானது

நோர்வேயின் ஜெசிமா சைடி இரண்டாம் இடத்தையும், பிரித்தானியாவின் ஜேம்ஸ் எலிங்டன் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.


ஒலிம்பிக் சம்பியனான உசைன் போல்ட் கடந்த வாரம் ரோமில் நடைபெற்ற டயமன் லீக் 100 மீற்றர் ஓட்டத்தில் ஜெஸ்டின் கட்லினிடம் தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேம்படியில் விளக்கக் கருத்தரங்கு

வலைப்பந்தாட்டத்தின் புதிய விதி குறித்த விளக்கக் கருத்தரங்கு நாளை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் மற்றும் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் இணைந்து நடத்தும் இக்கருத்தரங்கில் துறைசார்ந்தோர் மற்றும் ஆர்வமுள்ளோரைப் பங்குகொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எஸ்.பி.)

## முன்னேற்றம்




(ஜகார்த்தா)

இந்தோனேஷிய ஓப்பன் பட்மின்ரன் தொடரின் காலிறுதிக்கு இந்தியாவின் சாய்னா முன்னேறினார்.

ஜகார்த்தாவில், இந்தோனேஷிய சூப்பர் சீரிஸ் பிரிமியர் ஓப்பன் பட்மின்ரன் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் சாய்னா, ஜப்பானின் சயாகாவை எதிர் கொண்டார்.

இதில் முதல் செட்டை 21-13 என கைப்பற்றிய சாய்னா, இரண்டாவது செட்டையும் 21-19 என வென்றார். முடிவில், சாய்னா 21-13, 21-19 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்குள் நுழைந்தார்.




## இலங்கை அபார வெற்றி

(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இங்கிலாந்து அணிக்கெதிரான லீக் ஆட்டத்தில் இலங்கை அணி அபார வெற்றிபெற்றது.

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 293 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குக் 59, ட்ரொட் 76, ரூத் 68 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லசித் மலிங்க, ரங்கன ஹேரத், எரங்க தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 294 ஓட்டங்களைப்பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 47.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சங்கக்கார 134, குலசேகர 38 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 58 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றியை இலகுவாக்கினார். பந்து வீச்சில் அண்டர்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக சங்கக்கார தெரிவானார்.

## பிரான்ஸை வீழ்த்தியது பிரேசில்



(போர்டோ அல்கிரி)

பிரான்ஸ் அணிக்கு எதிரான நட்பு கால்பந்துப் போட்டியில் பிரேசில் அணி வெற்றி பெற்றது. பிரேசிலில் உள்ள போர்டோ அல்கிரியில் நடந்த சர்வதேச நட்புப் கால்பந்து போட்டியில் பிரேசில், பிரான்ஸ் அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

பின் இரண்டாவது பாதியில் எழுச்சிகண்ட பிரேசில் அணிக்கு ஒஸ்கார் (54ஆவது நிமிடம்), ஹெர்நானஸ் (85ஆவது நிமிடம்), லூகாஸ் (90ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். பிரான்ஸ் அணி வீரர்களின் கோல் முயற்சி எதுவும் கைகொடுக்கவில்லை.

ஆட்டநேர முடிவில், பிரேசில் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# வீரர்கள் விளையாடும் மைதானமாக காலபந்து அரங்கு உருவாகும்

(யாழ்ப்பாணம்)

சிறந்த முறையில் கால்பந்து அரங்கம் அமைக் கப்பட்டிருக்கின்றது. ஆனால், வீரர்கள் விளை யாடும் மைதானம் தகுதியானதாக இல்லை. அதனை அமைத்துத் தரவேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது என சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அபிவிருத்தி சிரேஷ்ட முகாமை யாளர் டேவிட் போர்ஜா தெரிவித்துள்ளார்.

யாழ். கால்பந்தாட்ட லீக்கிற்காக அரியாலை யில் அமைக்கப்பட்டுவரும் கால்பந்து மைதா னத்தை கடந்த ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறந்த முறையில் கால்பந்து அரங்கம் அமைக் கப்பட்டிருக்கின்றது. அதற்கு எங்கள் வாழ்த்துக் கள். ஆனால், வீரர்கள் விளையாடக்கூடிய மைதானம் தகுதியானதாக இல்லை. இதனை தகுதியான மைதானமாக மாற்றிக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும். அதாவது சுற்று வேலி அமைத்து, மைதானத்திற்குள் புற்கள் பதித்து மேம்படுத்துவதற்கு நாங்கள் உதவி யளிப்போம். இதன் மூலம் யாழ். மாவட்டத்தில் சிறந்த கால்பந்து மைதானம் உருவாகும். இதில் சர்வதேசப் போட்டிகளைக் கூட நடாத்தும் அள விற்கு அதன் பரிமாணம் அமையும். இதனை விரைவில் மேற்கொள்வதற்கு நாங்கள் நடவ டிக்கை எடுக்கவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் சர்வதேச கால்பந்தாட்ட வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு முகாமையா- ளர் ஸ்டுவர்ட் லோர்மன், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தெற்கு, மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்திற்கான அபிவிருத்தி அதிகாரி சாஜி பிரபாகரன், யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக் தலை வர் அன்ரனிப்பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)




## இந்தியா, பாகிஸ்தான் இன்று பலப்பரீட்சை

(லண்டன்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரின் ஆட்டமொன்றில் இன்றைய தினம் இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இரு அணிகளுக்கும் இப்போட்டி சம்பிரதாயபூர்வமான ஆட்ட மாக அமைந்தாலும் இரு அணிகளும் வெற்றிக்காக போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சிறுவர் விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கார்மேல் முன்பள்ளி பாடசாலை யின் சிறுவர் விளையாட்டு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல். 2.30 மணிக்கு யாழ். ஜோண்ஸ் பொஸ்கோ வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் சிறார்களின் வண்ணமயமான பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் சண். தயா ளன், யாழ். புனித ஜோண்ஸ் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி எம். ஜீவந்தி ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர். (எஸ்.பி.)

## சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்திற்கு மைதானம் அமைக்க அரச காணி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு சென். மேரிஸ் விளை யாட்டுக் கழக மைதானத்திற்கான அரச நிலம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் சுனாமி கடல் கொந்தளிப்பை அடுத்து கரையோரத்தில் இருந்த வீடுகள் அழிவடைந்திருந்தன. மீள்குடியேற்றத்தில் கரையோரத்திலிருந்து சுமார் 300 மீற்றருக்கு அப்பால் மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

கரையோரத்தில் இருந்த விளையாட்டுக்கழகத்தின் மைதானமும் மணலால் மூடப்பட்டிருந்தது. இருந்தும் இளைஞர்கள் அவ்விளையாட்டு மைதானத்தையே தற் காலிகமாகப் பயன்படுத்தி வந்தனர். கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கென ·விளையாட்டு மைதானத்திற்காக அரச நிலத்தினை ஒதுக்கித் தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீள்குடியேற்றப் பகுதியில் அரச நிலங்களை பொதுத் தேவைக்கும் சமூக மட்ட அமைப்புக்களின் தேவைக்கும் ஒதுக்கிக் கொடுக்குமாறு மருதங்கேணி பிரதேச செய லருக்கு பணிப்புரை வழங்கியிருந்தார். அதனையடுத்து கடந்த ஆறாம் திகதி மருதங்கேணி பிரதேசசெயலர் நட ராசா திருலிங்கநாதன், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க் கட்சித்தலைவர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன், கிராமசேவ கர் மற்றும் காணி உத்தியோகத்தர்கள் கட்டைக்காட்டிற்கு நேரடியாகச் சென்று, கட்டைக்காடு சென்.மேரிஸ் விளை யாட்டுக் கழகத்திற்கான நிலத்தினை அடையாளப்படுத்தி வழங்கியுள்ளனர்.

## மாகாண மெய்வல்லுநர் சாதனைகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் அடுத்த மாதம் 4,5,6,7,8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.மாகாண வீர, வீராங்கனைகள் இப்போட் டிக்கு தங்களை தயார்ப்படுத்தும் வகையில், கடந்த ஆண்டு மாகாண, தேசிய மட்ட பெறுபேறுகள் இணைக்கப்பட்டுள்ளது. இதில் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான பெறுபேறு வருமாறு: (42)

### 19 வயதுப் பிரிவு ஆண்கள்

| நிகழ்ச்சி | வடமாகாண சாதனைகள் | வடமாகாண நிற விருது | தேசிய மட்ட முதலிடம் | தேசிய மட்ட சாதனைப்பதிவு |
|---|---|---|---|---|
| 100 மீற்றர் | 00.11.07 | 00.11.06 | 00.11.01 | 00.10.58 |
| 200 மீற்றர் | 00.24.02 | 00.24.00 | 00.22.21 | 00.21.60 |
| 400 மீற்றர் | 00.50.02 | 00.50.02 | - - | 00.47.23 |
| 800 மீற்றர் | 02.01.06 | 02.01.06 | 01.55.07 | 01.52.10 |
| 1500 மீற்றர் | 04.19.09 | 04.15.00 | 04.02.01 | 03.59.94 |
| 5000 மீற்றர் | 17.11.00 | 17.11.00 | 15.27.01 | 15.27.01 |
| உயரம் பாய்தல் | 01.84 | 01.09 | 02.04 | 02.15 |
| நீளம் பாய்தல் | 06.71 | 06.71 | 07.24 | 07.37 |
| குண்டு தள்ளுகை | 13.63 | 13.63 | 14.86 | 13.88 |
| தட்டெறிதல் | 42.00 | 42.00 | 49.04 | 55.23 |
| ஈட்டி எறிதல் | 56.58 | 56.58 | 56.50 | 63.14 |
| முப்பாய்ச்சல் | 13.24 | 13.24 | 14.90 | 15.17 |
| கோலூன்றிப்பாய்தல் | 03.70 | 03.70 | 4.31 | 04.31 |
| 110மீ.தடை தாண்டல் | 00.16.05 | 00.16.05 | 00.14.90 | 00.14.34 |
| 400மீ.தடை தாண்டல் | 01.02.02 | 01.02.02 | 00.53.56 | 00.53.56 |
| 4X100 மீற்றர் | 00.46.07 | 00.46.00 | 00.42.92 | 00.41.93 |
| 4X400 மீற்றர் | 03.41.06 | 03.41.06 | 03.25.31 | 03.21.01 |

### 19 வயதுப் பிரிவு பெண்கள்

| நிகழ்ச்சி | வடமாகாண சாதனைகள் | வடமாகாண நிற விருது | தேசிய மட்ட முதலிடம் | தேசிய மட்ட சாதனைப்பதிவு |
|---|---|---|---|---|
| 100 மீற்றர் | 00.13.02 | 00.13.00 | 00.12.97 | 00.11.90 |
| 200 மீற்றர் | 00.28.04 | 00.28.02 | 00.26.47 | 00.23.77 |
| 400 மீற்றர் | 01.04.06 | 01.04.06 | - - | 00.55.76 |
| 800 மீற்றர் | 02.39.07 | 02.39.07 | 02.19.02 | 02.12.94 |
| 1500 மீற்றர் | 05.25.04 | 05.25.04 | 04.51.06 | 04.40.33 |
| 5000 மீற்றர் | 20.40.00 | 20.40.00 | 18.28.30 | 18.02.32 |
| உயரம் பாய்தல் | 01.55 | 01.05 | 01.63 | 01.70 |
| நீளம் பாய்தல் | 04.86 | 04.09 | 05.34 | 05.83 |
| குண்டு தள்ளுகை | 09.80 | 09.08 | 11.73 | 12.56 |
| தட்டெறிதல் | 03.91 | 30.91 | 39.46 | 39.46 |
| ஈட்டி எறிதல் | 30.35 | .30.35 | - - | 40.92 |
| முப்பாய்ச்சல் | 10.64 | 10.64 | - - | 11.74 |
| கோலூன்றிப்பாய்தல் | 03.10 | 02.09 | 03.01 | 03.01 |
| 110மீ.தடை தாண்டல் | 00.19.02 | 00.19.02 | 00.16.23 | 00.14.66 |
| 400மீ.தடை தாண்டல் | 01.14.08 | 01.14.08 | 01.03.06 | 01.02.72 |
| 4X100 மீற்றர் | 00.57.06 | 00.55.00 | 00.50.35 | 00.48.34 |
| 4X400 மீற்றர் | 04.40.00 | 04.40.00 | 04.15.52 | 03.57.44 |

## இலங்கை கிரிக்கெட் சபையால் தேயிலைக்கு சர்வதேச பிரசாரம்

இலங்கை தேயிலைச் சபையின் உத்தி யோகபூர்வ சர்வதேச பிரசாரப் பிரதி நிதியாக இலங்கை கிரிக்கெட் சபை நிய மிக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் வீரர்கள் அணியும் ரீ ஷேர்ட்டு களில் சிலோன் ரீ என்ற இலச்சினையைப் பொறிப்பதற்கான ஒப்பந்தம் தேயிலைச் சபைக்கும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத் தாகியுள்ளது.

2013, 2014, 2015 ஆகிய மூன்று வருடங்ளுக்கு தேயிலைச்சபை 530 மில்லியன் ரூபாவை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்கும்.

இதன் முதற்கட்டமாக கடந்த 12ஆம் திகதி 200 மில்லியன் ரூபாவுக்கான காசோலையை தேயிலைச் சபையின் தலைவர் ஜானகி குருப்பு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஜயந்த தர்மதாஸவிடம் கையளித்தார்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, இந்தியா, பாகிஸ்தான், டுபாய், தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து உள்ளிட்ட வெளிநாடுகளில் இலங்கை கிரிக்கெட் அணி போட்டிகளில் கலந்துகொள்ளும்போது தாங்கள் அணி யும் ரீ ஷேர்ட்டின் முன்பக்கம் ரீ என்ற சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும்.

இதேபோன்று உள்நாட்டில் போட்டி களில் கலந்துகொள்ளும்போது ரீ-ஷேர்ட் டின் இரு கைகளிலும் இந்தச் சின்னம் பொறிக்கப்பட்டிருக்கும்.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச் சர் மஹிந்த சமரசிங்க, விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத் கமகே ஆகிய இருவரும் ஒப்பந்தங்களை பரிமாறிக்கொண்டனர்.

இலங்கை தேயிலைச் சபையின் கேட் போர் கூடத்தில் கடந்த12ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தின்போது மேற்படி ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

நவம்பர் மாதம் டுபாய், சார்ஜா நகரில் நடைபெறும் மூன்று டெஸ்ட் போட்டிகளி லும் 5 ஒரு நாள் போட்டியிலும் கலந்து கொள்ளும் இலங்கை அணி இலங்கை




தேயிலைச் சபையின் சின்னத்துடன் விளையாடவுள்ளது.

சர்வதேச மட்டத்தில் இலங்கைத் தேயிலைக்கு முதலிடம் உள்ளபோதும் இலங்கை தேயிலைக்கு உலக நாடுகளில் மேலும் கிராக்கியை ஏற்படுத்தும் நோக் கில் பிரசார நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

தேயிலை ஏற்றுமதியாளர்களின் இணக் கப்பாட்டுடன் ஏற்றுமதியாகும் ஒரு கிலோ தேயிலைக்கு 3 ரூபா 50 சதத்தை பிரசார நடவடிக்கைகளுக்கான நிதியத்திற்கு சேர்க்கப்படுகிறது.

இந்த நிதியத்திலிருந்தே 530 மில்லியன் ரூபாவை தேயிலைச் சபை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்குகிறது என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரி வித்தார்.

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு அதிக பணம் கொடுத்து இணை வதற்கு தனியார் துறையினர் ஆயத்தமாக வுள்ளபோதும் முதல் முறையாக கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அரச நிறுவனம் ஒன் றுடன் நாட்டிற்காக ஒன்றிணைகிறது என அமைச்சர் மஹிந்தானந்த அழுத் கமகே தெரிவித்தார்.

உலகில் இலங்கை தேயிலைக்கு முத லிடம் போன்று இலங்கை கிரிக்கெட் அணிக்கும் முதலிடம் உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



# பனிக்குள் உயிர்!

உலகிலேயே மிகப் பழைய வை எவை என்று கேட்டால் அதிகம் யோசிக்காமல் சொல்ல வேண்டிய ஒரு பதில் - பாறை கள். பூமியின் வயது, பூமியில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் போன்ற தகவல்கள் பாறைகளில் படிந்திருக்கின்றன.

அதே போல, வட, தென் துருவங்களில் உள்ள பனியிலும் பூமியின் ரகசியங்கள் புதைந் திருக்க வாய்ப்பிருக்கிறது என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

அதையும் ஆராய்ந்து பார்த்து விடுவோம் என்று நான்ஸி பேர்ட்லர் முடிவு செய்தார். இவர் ஜெர்மனியில் படித்துவிட்டு நியூசிலாந்துக்கு ஆராய்ச்சி செய்ய வந்தவர். அவரும் அவருடன் ஒரு விஞ்ஞானிகள் குழுவும் அண்டார்டிகாவுக்கு சென்றது.

அங்கு ரூஸ்வெல்ட் தீவில் உள்ள பனியின் பருமன் ஏறத்தாழ ஆயிரம் மீற்றர். அண்டார்டிகாவின் ஆழங்களில் புதைந்திருக்கும் பனியின் மையப்பகுதி கிட்டத்தட்ட ஒன்றரை லட்சம் வருஷங்கள் பழசு என்று சொல்லலாம். அந்த மையப் பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட மாதிரிகளை தோண்டி எடுத்துக் கொண்டு நான்ஸி பேர்ட்லரும் அவருடைய விஞ் ஞானிகள் குழுவும் நியூசிலாந்தின் வெலிங்டன் நகர் அருகில் உள்ள ஆராய்ச்சிக் கூடத்துக்கு எடுத்து வந்திருக்கின்றனர். ஒவ்வொரு மாதிரியும் ஒரு கிரிக்கெட் மட்டையின் நீளம், அகலம் கொண்டது.

இந்த தொன்மையான பனிக்கட்டி ஒன்றில் கடல் உயிரினத்தின் அடையாளம் உறைந்திருக்கிறது என்று நம்புகிறார்கள். ஆனால் இதை உறுதி செய்ய மேலும் ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது.

இந்த ஆராய்ச்சியின் ஒரு முக்கிய நோக்கம் - உலக வெப்பமயமாதல் குறித்து அண்டார்டிகாவின் பனிக்கூறு களிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்ள முடியும் என்பதாகும்.

இப்போது உலகின் ஒட்டுமொத்த வானிலையில் ஏற்பட்டு வரும் மாறுதலின் முதல் தாக்கம் பற்றி வட, தென் துருவங்களில் இருக்கும் பனிப்படலங்கள் உருகுவதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அண்டார்டிகாவில் உள்ள மிகப் பெரிய பனிப்படலம் ஒன்றின் பெயர் - ரோஸ் பனிப்படலம்.



இதன் பரப்பு சுமார் 4,87,000 சதுர கிலோமீற்றர்.

வெப்பம் அதிகரித்து வருவதைக் கொண்டு பார்க்கும்போது, தற் போது உலகம் வெப்பம் அடைந்து வரும் வேகத்தில் இது உருகுவது நிச்சயம். ஆனால் இந்த ரோஸ் படலம் உருகுவதற்கு ஐம்பது வருஷங்கள் ஆகுமா அல்லது ஐந்நூறு வருஷங்கள் ஆகுமா தெரியாது. இது போன்ற கேள்வி களுக்கு விடைகள் கிடைக்க நான்ஸி பேர்ட்லரின் ஆராய்ச்சி உதவும்.

# தாவரங்களுக்கு உணர்ச்சி உண்டா?

மனிதன் பொய் சொன்னாலும் கூட, மரம், செடிகள் கண்டுபிடித்து விடுமாம், தாவரங்களுக்கு அவ்வளவு நுண்ணறிவு உண்டு என்று நிரூபித்திருக்கிறார் பாக்ஸ்டர் என்பவர்.



தன் மீது பிரியமுள்ளவர்களிடம் செடிகளும், மரங்களும் அளவுக்கு மீறிய பாசத்துடன் இருக்கின்றன. தன்னை வளர்க்கும் எஜமானருக்கு ஏதேனும் ஆபத்து வரும் போலிருந்தால் அவை படபடக்கின்றனவாம்.


பாக்ஸ்டர் செய்த இன்னொரு சோதனை, சிந்தனையைத் தூண்டக் கூடியது. ஒரு அறையில் இரண்டு செடிகளை வைத்தார். பிறகு அறைக்குள் ஒருவரை அனுப்பி, ஒரு செடியை வேரோடு கிள்ளி எறிந்து, பிய்த்துப் போடும்படியாக சொன்னார். அந்த நபர் அவ்வாறே செடியை பிய்த்துப் போட்டு விட்டு வெளியே வந்து விட்டார்.

“யார் செடியைக் கொலை செய்தது என்பது, அறையிலிருந்த இன்னொரு செடியைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

பாக்ஸ்டர் மிஞ்சியிருந்த செடியுடன், “போலிகிராப்” என்ற கருவியை இணைத்தார். பிறகு, ஐந்து பேரை ஒவ்வொருத்தராக அந்த அறைக்குள் வரச் செய்தார். கிள்ளி எறிந்த ஆள் வந்த சமயம், செடியின் உணர்வுகள் துடிதுடிப்பதை, “போலிகிராப்” பதிவு செய்தது. கொலைகாரனை செடி அடையாளம் கண்டுகொண்டு விட்டது... என்கிறார் பாக்ஸ்டர்!

மனிதனிடம் அகன்று வரும் நேயம், மரங்களிடமாவது எஞ்சி உள்ளதே என சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்.

# தெரியுமா?



- காற்று மண்டலம் என்பது பூமிக்கு 990 கிலோமீற்றர் உயரம் வரை உள்ளது.
- பூமி சுழல்வதால்தான் காற்று வீசுகிறது.
- குறட்டையும் கனவும் ஒரே நேரத்தில் வராது.
- 18 செ.மீ. நீளமுள்ள பென்சில் 55 கிலோமீட்டர் கோடு கிழிக்கும். 45 ஆயிரம் சொற்களை எழுதக்கூடியது. 17 தடவை கூர்மையாக்கலாம்.
- ஜனவரி 01 ஆம் திகதியை சுதந்திர தினமாக கொண்டாடும் நாடு சூடான்.
- தனது நாட்டு தேசியக்கொடியில் கோவிலைக் கொண்டுள்ள நாடு கம்போடியா (அங்கோர் வாட் கோவில் கொடியில் உள்ளது.)
- பூவரசம்பூவை தேசிய சின்னமாக வைத்திருக்கும் நாடுகள் ஹங்கேரி, ருமேனியா.
- பாரிசில் உள்ள ஈ.்.பிள் டவரில் 25 இலட்சம் ஆணிகளும் நட்டுகளும் அடிக்கப்பட்டுள்ளன.
- ஈ.வெ.ரா. பெரியார் தனது வாழ்நாளில் 10,700 பொது நிகழ்ச்சிகளில் 21,400 மணித்தியாலங்கள் பேசியிருக்கிறாராம்.
- உலகில் அதிகமாகக் காணப்படும் பெயர் “முகம்மது”

# பிழையின்றித் தமிழ் 26

**- ஞானச்செல்வன் -**

**வெகுளிப் பெண்:** கள்ளம், கபடம் அறியாத சூது, வாது தெரியாத (அப்பாவிப்) பெண்ணை வெகுளிப் பெண் என்று சொல்லி வருகிறோம். பெண்ணை மட்டுமன்று, “அவனா” சுத்த வெகுளி; ஒரு மண்ணுந் தெரியாது. என்று ஆண் பிள்ளை யையும் சுட்டுவதுண்டு. ஆக வெகுளி என்றால், உலக நடப்பு அறியாத நல்லது கெட்டது தெரி யாத தன்மை என்று கருதுகிறோம். உண்மையில், வெகுளி என்பதற்குச் சினம் (கோபம்) என்பதுதான் பொருள்.

“குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது”

ஆகக் “கோபக்காரியை” “அப்பாவி” ஆக்கிவிட்டோம். அப் பாவி என ஆக்காமல் விட்டோமே!



குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி

**குண்டுமணி:** காட்டுச் செடி ஒன்றின் விதை யைக் குண்டுமணி என்கிறோம். பெருமளவு சிவப்பும், கொஞ்சம் கறுப்பும் உடையது அது. “ஒரு குண்டுமணி” தங்கம் கூட வீட்டில் இல்லை என்பார்கள்.

பொன் அளவையில் குண்டுமணியை எடை கணக்கிடப் பயன்படுத்தியதுண்டு. குண்டு மணி என்று உடல் மிகக் குண்டாக இருக்கும் ஒரு நடிகருக்குப் பெயருண்டு. முன்சொன்ன குண்டு மணி என்ற சொல் சரியானதா? இல்லை. அதன் பெயர் குன்றிமணி.

திருக்குறளில் பல இடங்களில் குன்றியெனும் சொல் குன்றி மணியைச் சுட்டுவதாக வந்துள்ளது. “புறங்குன்றி கண்டனையரேனும் அகங்குன்றி மூக்கிற் கரியா ருடைத்து” என்பது ஒரு குறள். குன்றிமணியின் சிவப்பைப் போல் வெளித் தோற்றத்தில் செம்மையுடையவராகவும், அகத்தில் (மனத்தில்) குன்றி மணி மூக்கைப்போல் கரியர் (கறுப்பு எண்ணம் உடையவர்) ஆகவும் இருப்பவர் (போலித் துறவியர்) உலகில் உளர் என்பது இக்குறட்கருத்து.

**என்ன தமிழோ இது?:** “வெள்ள நிவாரணமாக ஒவ்வொரு வர்க்கும் தலா ரூபா1000 வழங்கப்பட்டது” என்று செய்தி படித்தார்கள். தலா என்பதன் பொருள் தலைக்கு என்பதாம். இது தலையுடைய மனிதரைக் குறிக்கும். தலைக்கு ஆயிரம் ரூபா என்றாலும் ஒவ்வொரு வருக்கும் ஆயிரம் ரூபா என்றாலும் பொருள் ஒன்றே.

ஒவ்வொருவர்க்கும் எனச் சொன்னால் தலா வேண்டாம். தலா போட்டால் ஒவ்வொரு வர்க்கும் எனல் வேண்டாம்.

கல்வி கண் போன்றது; கல்விக் கண் கொடுத்த கடவுள் - இவ்விரண்டு தொடரும் பிழையற்றவை. ஆனால் ஒரு புத்தகத்தில் கல்விக் கண் போன்றது என்றும், ஒரு சிற்றிதழில் கல்வி கண் கொடுத்த கடவுள் என்றும் படிக்க நேர்ந்தபோது என்ன தமிழோ இது? என்று மனம் வருந்தினேன்.

கல்வியானது மனிதருக்குக் கண்ணைப் போன்றது என்பது முதல் தொடரில் பொருள். கல்வியாகிய கண்ணைக் கொடுத்த கடவுள் இரண்டாம் தொடரின் பொருள். கல்வியைக் கண்ணாக உருவகப்படுத்தும்போது கல்விக்கண் (வல்லொற்று) மிகுதல் சரியாம்.. உருவகம் என்றால் கல்வி வேறு கண் வேறு இல்லை. கல்வியே கண்ணாம் என்று கல்வியைக் கண்ணாக உருவகப்படுத்துதல்.

கல்வி கண் போன்றது எனும் போது கல்வியானது கண்ணைப் போன்றது எனக் கல்விக்குக் கண்ணை உவமை சொல்கிறோம். இயல்பாக இருக்க வேண்டிய இடத்தில் வல்லொற்றுப் போட்டால், கல்விக் கண் என்று உருவகமாகிவிடு கிறது. பின் போன்றது எனும் சொல்லுக்குப் பொருளில்லாமல் போகும்.

இ்.தன்றி, மற்றொரு தொடரில், கல்வி கண் கொடுத்த என்றிருப்பது கல்வியும் கண்ணும் கொடுத்த என்று வேறு பொருள் உருவாக்கிடும். ஆதலின் கல்விக் கண் கொடுத்த என்று எழுதுதல் முறையாம். எங்கே எப்படி இந்த ஒற்றெழுத்துகளைப் போடுவது என அறிய நல்லறிஞர்களின் நூல்களைப் படிக்க வேண்டும்.

# காணாமல் போனவன்

பல வருசங்களுக்கு முன்னர், ஒரு காட்டிலே வயதான தாத்தாவும் பாட்டியும் இருந்தார்கள். தினமும் காட்டில் இருக்கிற மரங்களை வெட்டி, விறகாக்கி அதை பக்கத்து கிராமத்தில் விற்று வந்தார் தாத்தா. ஒரு நாள் மதியம் நன்கு களைத்துப் போய் சாப்பிட ஓரிடத்தில் அமர்ந்தார். பாட்டி அவருக்கு கேழ்வரகு களி கொடுத்து அனுப்பி இருந்தாள். களியை கையில் எடுத்ததும் களி தவறி கீழ விழுந்து உருண்டு ஓடியது. பாவம் தாத்தா, அந்த தள்ளாத வயதில் களியை துரத்திக்கொண்டு ஓடினார். களி ஒரு பொந்துக்குள்ளே விழுந்துவிட்டது. அது எலிப் பொந்து போல இருந்தது. ஐயோ இனி சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்று யோசித்தார். நல்ல பசி வேறு. அப்போது திடீரென்று ஒரு அழகான எலி எட்டிப் பார்த்து.. "மிக்க நன்றி தாத்தா" என்று சொல்லியது. அட எலி பேசுதே என்று பாத்தார் தாத்தா. "நல்லா சாப்பிடு எலி. அழகாக இருக்கிறாயே" என்று சொன்னார். எலி சிரித்துவிட்டு.. "நீங்கள் எங்கள் அரண்மனைக்கு வருகிறீர்களா?" என்று கேட்டது.

"இந்த சின்னப் பொந்துக்குள்ளே நான் எப்படி வர முடியும்?" என்று தாத்தா கீழே அமர்ந்துகொண்டார். காலில் வலி இருந்தது அவருக்கு. "என் வாலைப் பிடித்துக்கொள்ளுங்கோ தாத்தா. கண்ணை மூடிக்கொள்ளுங்கோ" என்று சொல்லியது எலி. வாலைப் பிடித்துக்கொண்டார். கண்ணையும் மூடிக்கொண்டார்.

எங்கயோ பறக்கிற மாதிரி இருந்தது தாத்தாவுக்கு. "தாத்தா வாருங்கள் வாருங்கள்" என்ற சத்தம் கேட்டு கண்ணைத் திறந்தார் தாத்தா. எலிகளுடைய அரண்மனை தான் அது. நிறைய தங்கம் இருந்தது. சில எலிகள் சமைத்துக்கொண்டு இருந்தன. சில எலிகள் ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தன. சில எலிகள் சாப்பாட்டுப் பொருள்களை எங்கிருந்தோ எடுத்துக்கொண்டு வந்தன. எங்கு பார்த்தாலும் தங்கமாகத் தெரிந்தது. பெண் எலி ஒன்று வந்து "தாத்தா உங்களுக்கு பசிக்கும், இந்தாருங்கள் சாப்பாடு" என்று சாப்பாடு கொடுத்தது. எலிகள் எல்லாம் பாட்டுப் பாடின..

"நாங்கள் இங்கே எலிகள்
நல்ல நல்ல எலிகள்
பூனைச் சத்தம் வேண்டாமே
எங்கும் அமைதி வேண்டுமே
திலக்கலக்கா திலக்கலக்கா"

தாத்தா பாட்டுக் கேட்டுக்கொண்டே சந்தோஷமாய்ச் சாப்பிட்டார். ராஜா போல இருந்த எலி ஒன்று தாத்தாவுக்கு மூட்டை நிறைய தங்கம் கொடுத்து அனுப்பியதாம். மறுபடியும் அதே எலியின் வாலைப் பிடித்துக்கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு பறந்து அவர் வீட்டுக்கு வந்துசேர்ந்தார்.





வீட்டுக்கு வந்த தாத்தா, அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை பாட்டியிடம் சொன்னார். தங்கத்தை எல்லாம் காண்பித்தார். பக்கத்து வீட்டில் இருந்த ஒருவன் இதை எல்லாம் கேட்டான். அதே பொந்திற்குப் போய் ஒரு களி உருண்டையை போட்டான். அதே எலி வந்தது, அதே போலவே அவனை அவர்களுடைய அரண்மனைக்கு கூட்டிச் சென்றது.

"நாங்கள் இங்கே எலிகள்
நல்ல நல்ல எலிகள்
பூனைச் சத்தம் வேண்டாமே
எங்கும் அமைதி வேண்டுமே
திலக்கலக்கா திலக்கலக்கா"
எலிகள் பாடும் சத்தம்.

அரண்மனையில் எங்கு பார்த்தாலும் தங்கமாக இருந்துதாம். இவனுக்குப் பேராசை. ஒரு மூட்டை தங்கம் மட்டும் போதாது, எல்லாவற்றையுமே எடுத்துக்கொள்ளலாம் என்று யோசித்தான். பெண் எலி இவனுக்கு சாப்பாடு எடுத்து வரும் போது "மியாவ் மியாவ்" என சத்தம் போட்டான். எல்லா எலியும் பயந்து எங்கே போயிற்றென்றே தெரியவில்லை.. கொஞ்ச நேரத்தில் ஒரு எலிகூட அரண்மனையில் இல்லை. எல்லா தங்கத்தையும் அள்ளி எடுத்தான். ஆனால் அங்கி ருந்து எப்படி வெளிய போவது என்று தெரியவில்லை. எல்லாம் இருட்டாக மாறியது. கத்தி அழுது பார்த்தான். ஒருத்தரும் வரவில்லை. அவனை காணோம் என்று இன்னும் கூட தேடிக்கொண்டிருக்கிறார்கள். பாவம்.

---

# போகமுடியாத கற்பனை இடத்துக்கு வழி சொல்பவர்களால் வந்தவினை...

★ வடக்கு, கிழக்கு மாகாணசபையை ஒற்றுமையாக இயக்க வாய்ப்புப் பெற்றிருந்தால் ஐக்கிய இலங்கைக்குள் ஒரு மாகாண அரசை ஸ்தாபிப்பதற்குரிய வசதிகளையும், அனுசரணை-களையும் கொண்டிருந்த நாம் காலகதியில் அதிகாரப்பரவலாக்கல் கட்டமைப்பை நிலை நிறுத்தியிருப்போம் .இலங்கையின் சகல சிறுபான்மை சமூகங்களுக்கும் அது நன்மை பயப்பதாக அமைந்திருக்கும். ஆனால் இன்று கற்பனைக்கெட்டாத அளவு உயிர்களை பலி கொடுத்து பேரழிவுகளை சந்தித்து அறுத்துக் கொட்டப்பட்ட வடக்கு மாகாணசபைக்காக காத்திருக்கிறோம்.

போகமுடியாத கற்பனை இடத்துக்கு வழி சொல்பவர்களால், சுயநலமும் - பேரவாவும் - சமூக கரிசனை - பொறுப்புணர்வு எதுவுமற்ற -முட்டாள் பேர்வழிகளால் வந்தவினை இது. 13ஆவதின் அதிகாரங்களை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அதிகாரங்கள் மீளவும் பறிக்கப்படாத நிலையை அடைவதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபடல் வேண்டும். அதற்கு அனைத்து சிறுபான்மை சமூகங்களுடனும், அதிகாரப்பரவலாக்கலை ஆதரிக்கும் தெற்கின் ஜனநாயக இடதுசாரி சக்திகளுடனும் கரம் கோர்க்க வேண்டும்.



– ஸ்ரீதரன்–சுகு (ஈ.பி.ஆர்.எல்.எப் – பத்மநாபா கட்சி)

★ "சமரசம் என்பது ஒரு தவறான சொல்" என்று கருதலாகாது என விடுதலைப் போராட்ட வீரர் பகத்சிங் குறிப்பிட்டார். இந்த அணுகுமுறையை புலிகள் இயக்கத்தினரும் பின்பற்றி இருக்கலாமோ என்ற கருத்தைப் பலர் வெளிப்படுத்தி இருப்பது தமிழ்ச் சமூகம் நன்கு அறிந்த ஒன்று.


விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் உருவாக இருந்த பல சமரசத் தீர்வுகள் தட்டி விடப்பட்டது உண்மை என்பதை மறைக்க முடியாது. அதுவும் இன்று நீடித்து நிற்கும் துயரத்திற்குக் காரணமாகும்.

இதே காலத்தில், நேபாளத்தில் உலகச் சூழ்நிலை மாறியுள்ளதைக் கணக்கில்கொண்டு, தங்கள் பலத்தைத் தக்க வைத்து, ஆயுதப் போராட்டத்தைத் தவிர்த்தனர். தேர்தலில் பங்கேற்று ஆட்சிப் பொறுப்பையும் ஏற்றனர். மன்னரின் அதிகாரத்தைப் பறித்தனர். இது இனப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு உருவான ஆயுதப் போராட்டம் அல்ல என்றாலும் இவர்களின் நடைமுறை யுக்தி கவனிக்கத்தக்கது.

இலங்கையில் இன்று தமிழ் மக்கள் சந்தித்துள்ள இவ்வளவு சேதாரங்களுக்குப் பின்னரும், தமிழ் ஈழத்தைத் தவிர்த்து, வேறு எந்த ஆலோசனைகளையும் ஏற்க மறுக்கும் இயக்கங்கள் மற்றும் அறிவு ஜீவிகள் - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். இலங்கையின் பழம்பெரும் மன்னர்கள் கால வரலாறு, தமிழர்களுக்கு அன்று இருந்த உயர்வான நிலை போன்ற ஆதாரங்களையும் தங்களின் கோரிக்கையை நியாயப்படுத்துவதற்கான சாட்சியாக அழைக்கிறார்கள்.

அரசியல் போராட்டங்களில் வரலாறு ஒரு குறிப்பிடத்தகுந்த ஆயுதமாகப் பல இடங்களில் பயன்படுத்தப்படுகிறது. சமீபத்தில் மறைந்த வரலாற்றுப் பேராசிரியரும் மார்க்சிய சிந்தனையாளருமான எரிக் ஹொப்ஸ்வாம், வரலாற்றைப் பயன்படுத்துவது குறித்து தெரிவித்த கருத்து கவனிக்கத்தக்கது. "ஹெரோயின் என்ற போதை மருந்து தயாரிக்க பொப்பி மலர் ஒரு அவசியமான மூலப் பொருள். அதுபோல, அடிப்படைவாதக் கருத்துகள், இனக்குழு சார்ந்த கருத்துகள் மற்றும் தேசியவாதக் கருத்துகள் ஆகியவற்றிற்கு வரலாறு ஒரு மூலப் பொருளாக அமைகிறது. வரலாறு எழுதும் பணியானது, அணுக்கள் குறித்த ஆய்வுபோல் அல்லாது யாருக்கும் தீங்கு விளைவிக்காத ஒரு பணி என எண்ணியிருந்தேன். ஆனால் வரலாறு எழுதும் பணியும் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதை இப்போது உணர்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

ஆப்ரஹாம் லிங்கன், "எந்த ஒரு நாடும் தானாகவே தன்னை துண்டாடிக் கொள்கிற வாய்ப்பை உருவாக்காது" எனக் குறிப்பிட்டார். ஆம் அது முதலாளித்துவ அரசோ அல்லது கம்யூனிஸ்ட்கள் தலைமையிலான அரசோ எதுவானாலும், தன்னிடம் உள்ள ஒரு பகுதி இன்றைய உலகச் சூழலில் பிரிந்து செல்வதை ஒருபோதும் அனுமதிக்காது. இன்றைய யதார்த்தத்தில் அப்படிப் பிரித்துக் கொடுப்பார்கள் என எதிர்பார்ப்பதும், பொருத்தமாக இருக்காது.



– டி.கே.ரங்கராஜன் (இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி)

★ கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அனைவரும் ஒன்றுசேர வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தேன். இருப்பினும், யுத்தம் முடிந்த பின்னர் இராணுவத்தின் தொகையை இரட்டிப்பாக்க வேண்டும் என்று தெரிவித்திருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரும்பியது.

இன்று கூட்டமைப்பு வெளிநாடுகளுக்கு அடிக்கடி பயணங்களை மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பயணங்களின் போது எனக்கு ஒரு அழைப்பையேனும் விடுப்பது கிடையாது. அல்லது வெளிநாட்டில் கதைப்பதற்கு ஏதாவது யோசனை வைத்திருக்கின்றீர்களா என்றுகூட சம்பந்தன் கேட்பது கிடையாது. ஆனால் நாடாளுமன்றத்தில் பேசும் போதும் மட்டும் ஆனந்தசங்கரி இவ்வாறு ஊடகங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார் என்று தெரிவிப்பார்.

இந்த நாட்டில் சிறுபான்மையினர் இல்லை என்று நாங்கள் சொல்ல வேண்டும். அத்தகைய உணர்வை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். மாகாணசபைத் தேர்தல் முறைமையானது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டது. அரசியல் தெரியாத தேரர்களினால் மாத்திரமன்றி இதில் கைவைக்கும் உரிமை இந்தியா மற்றும் இலங்கைக்கு கூட கிடையாது.



– ஆனந்தசங்கரி (தமிழர் விடுதலைக் கூட்டணி)

★ சர்வதேசத்தை சேர்ந்தவர்கள் தமிழ் மக்கள் மீள்குடியேற்றம் தொடர்பில் பாரியளவில் குரல் கொடுத்து வருகின்றனர் எனினும், புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் மௌனம் காப்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

அதேபோல, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுமாறு கோரிவருகின்றதே தவிர புலிகளினால் வெளியேற்றப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை குடியேற்றுமாறு ஒருதடவையேனும் கூறவில்லை இதுவும் வன்மையாக கண்டிக்கத்தக வியமாகும்.



– பைசர் முஸ்தபா –

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு

# ஈழத்தமிழர் வரலாற்றாதாரங்கள் சிதைந்து போகின்றது

ஈழத்திரு நாட்டில் வந்தேறு குடிகளல்ல தமிழர். எமது பூர்வீகத்துக்கு ஓர் வரலாறு உண்டு, ஓர் வம்சாவழி உணடு. இதை ஒவ்வொருவரும் புரிந்து கொளள வேண்டும். இது அனைவருக்கும் தெரிநத விடயம். ஆனால் இன்று "புரிந்து கொளள வேண்டும்" எனச் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டத்தில் எமது வரலாறு இருப்பதற்குக் காரணம் நாம் எமது வரலாற்றாதாரங்களை சிதைய விடுவதேயாகும்.

ஆங்கிலேயர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் என காலத்துக்குக் காலம் வந்த அநநியராட்சியால் மன்னராட்சிக் காலம் மலையேறிப் போனது. இதில் இறுதி வரை தன்னாட்சியைத் தக்க வைத்த தமிழ் மன்னன் சங்கிலிய மன்னனாகும். இவன் நல்லூர் இராஜதானியை மையமாக வைத்து அரசாட்சி செய்து வந்தான். இவனது மன்னராட்சி ஆதாரங்கள் தமிழரின் குறிப்பாக யாழ். குடாநாட்டு தமிழ் மக்களின் தமிழ் மணம் பரப்பும் வரலாற்றுப் பொக்கிஷங்கள் இது இன்று சிதைந்து போகின்றது. தூர்ந்து போகின்றது. ஏன் பாராமுகமாக அனைவரும் இருக்கின்றார்கள் என்பது தான் புரியவில்லை.


**தயவுசெய்து இதில் மாற்றம் வேண்டும் மக்கள் முரசு ஒலிக்கின்றது செவி கொடுங்கள்.**

யாழ்.குடாநாட்டில் நல்லூர் இராஜ தானியின் வரலாற்று ஆதாரங்களாக இருப்பது சங்கிலிய மன்னனுடைய முதல் மந்திரிமனை. இது சட்டநாதர் சிவன் கோவிலுக்கு அருகில் உள்ளது. அதற்கு எதிர்த்திசையில் பிரதான வீதியோரமாக இருப்பது சங்கிலிய மன்னனின் அரண்மனை நுழைவாயில். அதற்குப் பின்புறமாக சங்கிலிய மன்னனால் கட்டப்பட்ட யமுனா ஏரி. இவையெல்லாம் குடாநாட்டில் இருக்கின்றதென்றே சிலருக்குத் தெரியாது. அந்த அளவிற்கு வரலாற்றைப பேணும் பணபு எம்மிடம் அருகி விட்டது.

### வரலாற்று மகிமைகள்

யமுனா ஏரி தொடர்பாக பல பேராசிரியர்கள் பல கருத்துக்களை முன்வைக்கின்றார்கள். இது சங்கிலிய மன்னனால் கட்டப்பட்டு இந்தியாவில் உள்ள யமுனா நதியில் இருந்து நீர் கொண்டு வந்து இதனுடன் கலந்தமையால் இதற்கு யமுனா ஏரி எனும் பெயர் வரலாயிற்று.

வரலாற்றுத்துறைப் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள் இது தொடர்பாக பல்வேறு வரலாற்று ஆதாரங்களை முன்வைத்துள்ளார். அதேவேளை, பேராசிரியர் சிவத்தம்பியவர்கள் மற்றும் கலாநிதி குணராஜா (செங்கையாழியன்) போன்றோர் பல விசித்திரமான கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள். இது சங்கிலிய மன்னனின் மனைவி குளிப்பதற்காக கட்டப்பட்டிருக்கலாம் என ஒரு சிலர் கூறுகின்றனர். ஏனெனில் இதில் இருந்து நகரும் சுரங்கவளி அந்தப்புரத்தில் உள்ளமை இக்கருத்தை வலுவூட்டுகின்றது. இக்கருத்தை மறுக்கின்ற ஆய்வாளர்கள் காரணம் காட்டும்போது ஆழம் காணமுடியாத சதுப்பு நிலத்துடன் கூடிய யமுனா ஏரியினை மனைவி குளிபபதற்கு எப்படிக் கட்டியிருக்க முடியும்?... என மறுத்து யமுனா ஏரி கட்டியதன் அர்த்தத்தை திசை மாற்றுகின்றார்கள். அன்றைய காலத்தில் மன்னனின் சிறப்பு போர்முரசின் ஒலியில் தான் தங்கி இருந்தது. இம்முரசு செய்வதற்கு இந்த யமுனா ஏரி பயன்படுத்தப்பட்டதாக கருதுகின்றனர்.



ஏரியின் நடுவில் உள்ள மேடையில் விலங்குகளின் தோல் பதனிடப்படும் எனவும், சூரிய வெப்பத்தின் வெம்மையில் காய்நதது பின் யமுனா ஏரியின் ஈரலிப்பு நீராவியால் தோல் குளிரூட்டப்படட பின் காய்ந்து என தொடர்ந்து நிகழும் பொறிமுறையால் தோல் பதனிடப்பட்டு முரசொலியை பிரமாண்டமாக ஒலிக்கச் செய்தனர். இதற்காக யமுனா ஏரி கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது.

இவ்வாறான வரலாற்றுச் சுவை மிக்க தமிழர் மரபுரிமைப் பொக்கிஷங்கள் கவனிப்பார் யாருமின்றி சிதைவுற்றுப் போகின்றது. மந்திரி மனை ஆடு, மாடு போன்ற விலங்குகளின் காப்பரண்களாகவும் கறையான் மற்றும் பாம்புப் பொந்துகள் நிரம்பிய கலாசார சீரழிவு இடம்பெறும் இடங்களாகவும் விளங்கி வருகின்றது.

யமுனா ஏரியின் ஒருபக்கச் சுவர் யாழ. கல்வித்திணைக்கள கட்டடத் தொகுதியின் தாக்கத்தால் தூர்ந்து போகின்றது. அரசியல் வாதிகளே!... அதிகாரிகளே தங்கள் நிதி ஒதுக்கீட்டில் இதற்கொரு தீர்வு காணுங்கள். நிதி ஒதுக்கப்பட்டுவிட்டால் புனரமைப்பை விரைவில் ஆரமபியுங்களா. பழமைக்கு புதுமை கொடுப்பது சிறந்த வரலாற்றாதாரமல்ல. பேணிப் பாதுகாப்பதே இன்றைய தேவைகளில் ஒன்று. யாழ். கோட்டை புதுப்பொலிவு பெறுகின்றது என நினைக்கின் றோம். ஆனால், அது பழமையின் மகிமையைச் சீர்குலைக்கும். ஆகவே வரலாற்றாதாரங்களை புனரமைப்புச் செய்வதை விட பேணிப் பாதுகாப்பதற்கு நிரந்தர நிதி ஒதுக்கீட்டினை வழங்குவதே சிறந்தது.

- வெண்கட்டியன்



# புதிர்ப்போட்டி 48

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

**புதிர்ப்போட்டி 48 இற்குரிய விடைகள் அனுப்பவேண்டிய இறுதித் திகதி 29.07.2013**

கீழே தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து வினாக்குறி உள்ள இடத்தில் வரவேண்டிய விடையைக் கண்டு கீறிடுக.

### புதிர்ப்போட்டி 47 இல் சரியான விடை எழுதி பாராட்டுப்பெறுபவர்கள் விபரம்

பெயர் :- எம்.வினோலியா
தரம் :- 10- பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.க.மகளிர் கல்லூரி.

பெயர் :- அ.கரோளினி தரம் :- 10
பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.பாடசாலை.

பெயர் :- என்.கிறிஸ்ரீனா தரம் :- 10 -
பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.க.மகளிர் கல்லூரி.

பெயர் :- ஏ.துஸ்யந்தினி
தரம் :- 10 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.க.மகளிர் கல்லூரி.

பெயர் :- ஊ.அமல அபிநயா தரம் :- 10
- பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.க.மகளிர் கல்லூரி.

பெயர் :- ரி.தனுசியா
தரம் :- 11 - பாடசாலை:- யா/ நெடுந்தீவு றோ.க.க.மகளிர் கல்லூரி.

1. மாணவன் ஒருவன் 10 நிமிடங்களில் 4 Km தூரம் பயணஞ் செய்து முதலாவது இடத்தைப் பிடித்தான். அவன் 1 மணித்தியாலம் 15 நிமிடங்களில் செல்லக்கூடிய தூரம் என்ன?

______________________

2. மாலா ஒரு நாளைக்கு 4 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை இரண்டு தேக்கரண்டிகள் வீதம் மருந்து குடிப்பாள். ஒரு வாரத்தில் அவள் குடிக்கும் மருந்து எத்தனை தேக்கரண்டி

______________________

3) கழிக்குக $\frac{6}{8} - \frac{1}{2} =$ ----------

4. ஒரு போத்தலில் நிரப்பப்படத்தக்க சோடாவின் கனவளவு 125 மில்லிலீற்றர் ஆகும். அத்தகைய 9 போத்தல்களைக் கொண்டு முற்றாக நிரப்பப்பட்ட பெரிய பாத்திரத்தின் கனவளவு யாது? ----------

5. 300 m நீளமான கம்பி ஒன்றில் 250 cm இடைவெளிவிட்டு அலங்கார மின்விளக்குகள் தொங்க விடப்பட்டுள்ளன. தொங்க விடப்பட்ட மின்விளக்குகள் எத்தனை?

______________________

6. அண்ணனிடம் உள்ள பணம் தம்பியிடம் உள்ள பணத்திலும் ரூபா 15 குறைவாகும். இருவரிடமும் உள்ள பணத்தின் மொத்தத் தொகை ரூபா 95 அகும். அண்ணனிடம் உள்ள பணம் எவ்வளவு?

______________________

7. மாலதியிடம் உள்ள பணத்தின் அரைப்பங்கு ஆகிய 450/= விமலாவிற்கு கொடுத்தபோது அது அனுலாவிடம் உள்ள பணத்தைவிட 75/= கூடிய்து. மூவரிடமும் உள்ள மொத்தப்பணம் எவ்வளவு,?

______________________

8. இன்னும் மூன்று வருடங்களில் புனிதாவின் வயது வனிதாவின் வயதின் மூன்று மடங்காகும். இப்பொழுது புனிதாவின் வயது 15 எனின் வனிதாவின் வயது யாது?

9. ரூபா 15 இற்கு 20 கொய்யாப்பழங்கள் வாங்கலாம். 35 கொய்யாப்பழங்கள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும்?

______________________

10 செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தைப் போன்று மும்மடங்காகும். செவ்வகத்தின் சுற்றளவுக்கு சமமான சதுரம் ஒன்று உள்ளது. செவ்வகத்தின் நீளம் 12 cm எனின் சதுரத்தின் ஒரு பக்க அளவு என்ன?

______________________

**சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது.**

### அனுப்பவேண்டிய முகவரி


**புதிர்ப்போட்டி இல....**
**தினமுரசு**
**இல .373 பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தபால் மூலமும் அனுப்பலாம், காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

### புதிர்ப்போட்டி 47 இற்கான சரியான விடைகள்

1) 18
2) 04
3) 25
4) 20
5) 34
6) 56
7) 10

### விணணபபதாரரின விபரம



மாணவர் முழுப் பெயர் :- ..............................

பாடசாலையின் பெயர் ..............................

தரம் :- :- ..............................

தொலைபேசி. இல.:- ..............................

முகவரி :- ..............................
..............................

# அரச ஊழியர்களின் நன்மை கருதி நடமாடும் வைத்திய பரிசோதனை

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள அரச ஊழியர்களின் நன்மை கருதி நடமாடும் வைத்தியப் பரிசோதனை முகாம் ஒன்றை, உடுவில் பிரதேச சுகாதாரப் பணிமனை உத்தியோகத்தர்கள் நடாத்தியுள்ளனர்.


இந்த வைத்தியமுகாம் கடந்த புதன்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 2.00 மணிவரை நடைபெற்றது. இந்த வைத்திய முகாமில் தொற்றுநோய் கள், தொற்றா நோய்கள் பற்றிய விளக்கங்களும், தொற்றா நோய்க்கான வைத்திய பரிசோதனைகளும் இடம்பெற்றிருந்தன. கண் பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தப் பரிசோதனை, மார்பகப் புற்றுநோய், முதலான பரிசோதனைகள் இடம்பெற்றிருந்தன.

உடுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஜெயக்குமரன், தெல்லிப்பளை வைத்தியசாலை வைத்தியர்கள் டாக்டர் ஏ.யோகராசா, டாக்டர் எம்.பிரதீபன் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

வலிகாமம் கல்வி வலயத்தினதும், வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினதும், 200 இற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள இந்த வைத்தியப் பரிசோதனையினால் பயன்பெற்றுள்ளனர். வைத்தியப் பரிசோதனை மேற்கொண்ட அனைத்து ஊழியர்களிற்கும் "நோய் நிர்ணயப் புத்தகம்" உடுவில் சுகாதாரப் பகுதியினரால் வழங்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் எதிர்காலத்தில் வைத்திய சிகிச்சையினைப் பெறமுடியும் என வைத்தியர்கள தெரிவித்துள்ளனர்.

கல்வியமைச்சினதும், சுகாதார அமைச்சினதும் அரச ஊழியர்களினதும் சுகநல வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இந்த நடமாடும் வைத்தியப் பரிசோதனை வேலைத்திட்டத்தை சுகாதாரப் பணிமனை முன்னெடுத்து வருவதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவிக்கின்றனர். (06)

# தாகசாந்தி மண்டபம் நயினாதீவில் அமைப்பு




(நயினாதீவு)

நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபையினர் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவ காலங்களில் இம்முறையும் வழமைபோல ஆலய முகப்பில் தாகசாந்தி மண்டபத்தை அமைத்து பக்த அடியார்களுக்குத் தாகசாந்தியை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த தாகசாந்தி மண்டபம் மஞ்சத்திருவிழாவான 18 ஆம் திகதி முதல் தெப்பத்திருவிழாவான 24 ஆம் திகதி வரை செயற்படவுள்ளது.

இங்கு பக்த அடியார்களுக்கு குடிநீர், குளிர்பானங்கள், கோப்பி, தேநீர் என்பன வழங்கப்படும். அத்தோடு தேர்த்திருவிழாவின்போது காலை விசேட முறையில் தயாரிக்கப்பட்டு பொதிசெய்யப்பட்ட அருட்பிரசாதமும் (சக்கரைச் சாதம்) அடியார்களுக்கு வழங்கப்படவுள்ளது. இவைகளுக்கான நிதி உதவி செய்யவிரும்பும் பக்த அடியார்கள் வர்த்தக வங்கிக் கணக்கு இலக்கம் 806007743 இல் பணத்தை இடலாம். அல்லது நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபை பொருளாளர் வி.பி.மகாலிங்கத்துடன் (முகாமையாளர் யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை) தொடர்பு கொள்ளலாம் என நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்திச் சபைத் தலைவரும் கொழும்பு பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளருமான ஆர்.பி.ஸ்ரீதரசிங் அறிவித்துள்ளார். (01)

# நெடுந்தீவு பனங்காணி கிராமத்தின் ஆத்தாங்கரை ஓடைப்பாலம் புனரமைப்பு



(நெடுந்தீவு)

நெடுந்தீவு பனங்காணி கிராமம் முதலாம் வட்டாரத்தில் அமைந்துள்ள "ஆத்தாங்கரை ஓடைப்பாலம்" ஆனது இப்பகுதிக்கு தேவையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான பாலமாகும் பனங்காணி கிராமம் ஆனது மழை காலங்களில் தனியான ஒரு தீவாக தோற்றம் பெறும் இக்கிராமத்துக்கு செல்லும் ஒரே ஒரு பாதை கோட்டை காடு சுடலை வீதியாகும். இவ் வீதியில் அமைந்துள்ள "பயற்றம் பிட்டி" என்னும் பகுதியில் இப்பாலம் அமைந்துள்ளது.

அந்த வகையில் இப்பாதையில் அமைந்துள்ள குறித்த பாலத்தின் ஊடாக பல தேவைகளுக்காக மக்கள் செல்வது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இப்பாலம் அமைந்துள்ள ஆத்தாங்கரை ஓடை நெடுந்தீவு மேற்கில் அமைந்துள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றான "வடக்கராவளி" குளத்துடன் தொடர்புடையது. இக்குளத்தில் இருந்து வெளியேறும் மேலதிகமான மழைநீரானது இப்பாலத்தினுடாகவே கடலைச் சென்றடைகின்றது.

இருப்பினும் பாலத்தினூடாக வெளியேறுகின்ற மேலதிக நீரின் தாக்கத்தினால் அது கடந்த ஏழு எட்டு வருடங்களுக்குள் சேதமடைந்து இதனால் போக்குவரத்து செய்யமுடியாத நிலை காணப்பட்டது. இதைக் கருத்தில் கொண்ட அப்பகுதி மக்கள் தற்காலிக ஏற்பாட்டுடன் இரும்பு தகடு ஒன்றைப் போட்டு வாகனங்கள் செல்ல முடியாதவாறு பாலம் அமைத்து சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொணடதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி நெடுந்தீவு அமைப்பாளருமான தானியேல் றெக்சியன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொடர்புகொண்டு எடுத்த பெரு முயற்சியின் பயனாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து இப்பாலம் திருத்தத்துக்கென ஆறு இலட்சத்து தொண்ணூற்றி இரண்டாயிரம் ரூபா பெற்றுக்கொடுத்து புனரமைப்புக்கள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் மாத்திரமின்றி ஏனைய பகுதி மக்களும் நன்மை அடைவதுடன் தமது மகிழ்ச்சியினையும் நன்றியினையும் அமைச்சருக்கும், பிரதேச சபைத் தலைவருக்கும் துறைசார் அதிகாரிகளுக்கும் வெளிப்படுத்தியுள்ளனர்.

# வாரம் ஒரு காரம்

## வரலாற்றுத் துரோகங்களும் வழிமாறிப் போன தீர்வுகளும்

இலங்கைத் தமிழர்கள் வரலாற்றில் காலத்திற்குக் காலம் பல தீர்வுகளும் பல திருத்தங்களும் முன்வைக்கப்பட்டன. இது பலர் செய்த வரலாற்றுத் துரோகங்களால் திசை மாறிப்போனது. மீண்டும் ஓர் வரலாற்றுத் தவறினை தமிழரசுக் கட்சி மேற்கொள்ளுமானால் மன்னிக்கப்படமுடியாத ஓர் அரசியல் துரோகமாகவே அது கணிக்கப்படும். இத்தனை இழப்புக்கள், இத்தனை துன்பங்களிற்கு யார் காரணம் என்பதை அரசியல் ரீதியாக சிந்தித்தோமானால் எமக்கு நாமே எதிரியாகும் மூலதத்துவம் வெளிப்படும்.

அழுத்தங்களின் பின்னணியில் இருந்து ஆயுதமுனைக்குப் பயந்தோமே தவிர அரசியல் தியாகிகளாக நாம் முன்வர துணியவில்லை. இன்று தமிழ் மக்கள் முன் அதிகாரமாக நிற்பதற்கு சிலரிற்கு அருகதை உண்டு, சிலரிற்கு அருகதையில்லை. ஏனெனில் உயிர் அச்சுறுத்தல்கள் மத்தியலும் அரசியல் கொள்கைகளை விற்காது, பெற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் இலாபங்களை தமிழ் மக்களிற்குப் பெற்றுக் கொடுத்தவர்கள் முன் தமிழரசுக் கட்சி தலை நிமிர்ந்து நிற்பதற்கு எந்த அருகதையுமில்லை. காலம் காலமாக தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வந்த அரசியல் எதிர்பார்ப்புக்களால் இன்றும் அரசியலில் நிலைத்திருக்கின்றார்களே தவிர தமிழ் மக்களிற்காக தமிழரசுக்கட்சி எதைச் செய்தது? எதைத் தமது சுயத்திற்கு அப்பால் சிந்தித்தது..? அரசியல் தீர்வுக்கு சாத்தியமாகக் கூடிய எந்தத் திட்டத்தை முன்வைத்தது?...

மாறாக தமிழ் மக்களிற்குக் கிடைத்த பல தீர்வுத்திட்டங்களை விலை போட்டு விற்றது. ஆழமாக சிந்திதோமானால் தமிழர்களுக்கெதிரி தமிழர்கள் தான். வெள்ளை வேட்டியை வெளுத்துக் கட்டும் நீங்கள் தமிழர்களின் வேதனையை எப்போதாவது சுமந்தீர்களா? தமிழர்களுக்காக எதையாவது செய்தீர்களா? அன்று தொட்டு இன்று வரை கோரிக்கைகளோடு பத்திரிகைகளில் படம் காட்டியது தான் மிச்சமாச்சு. இனிவரும் காலங்களிலாவது உணர்வுடன் தொழிற்பட ஆரம்பியுங்கள். இந்த இறுதி வாய்ப்பையும் தவறவிட்டால் வரலாற்றில் மன்னிப்பே கிடையாது.

### சந்திரிகா அரசு முன்வைத்த அன்றைய தீர்வு

தனி நாட்டிற்கு நிகரான அதிகாரப்பகிர்வுகளைக் கொண்டது. இதனைப் பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தியிருந்தால் அதைவிட குறைந்த அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபைக்கு கையேந்த வேண்டிய தேவை வந்திருக்காது. அன்று இருந்த வன்முறை சார் அரசியல்பார்வைகளால் தீர்வு குறித்த எல்லைகளைப் பரிசீலிக்க முன்பே பறிபோக விட்டார்கள். பலம் எம்மை நலமாக வாழ வைக்கும் என்கின்ற நம்பிக்கையில் பறிபோன கதைகள் அவை. இன்று தமிழர்களின் நிலை பிச்சை வேண்டாம் நாயைப் பிடி எனுமளவிற்கு சென்றுவிட்டது.

### ராஜீவ்காந்தி ஜேஆரின் அன்றைய மாகாணத்தீர்வு

இன்று குறைந்த அதிகாரங்களுடன் வரஇருக்கும் மாகாண சபை ஆட்சி முறையை அன்று இந்தியாவின் ஆதரவுடன் தமிழர்கள் ஒன்றுதிரண்டு பெற்றிருந்தால் அதை இடைநிறுத்த இலங்கையரசால் இயலாது போயிருக்கும். அச்சுறுத்தலிற்கப்பால் துணிந்து நடைமுறைப்படுத்த முன்வந்திருந்தால் தமிழரசுக்கட்சியின்பால் முதலமைச்சர் பதவி நகர்ந்திருக்கும். இந்தியாவின் பிரசன்னத்தில், அதிகாரங்களைக் குறைக்கவோ நிராகரிக்கவோ மத்திய அரசினால் முடியாது போயிருக்கும்.

இன்று வரப்போகும் தீர்வினை அன்றே பெற்றிருந்தால் இத்தனை இழப்புக்கள், துன்பங்கள் நேர்ந்திருக்காதல்லவா?... அச்சுறுத்தலிற்குப் பயந்து முதலமைச்சர் பதவியை ஏற்காது விட்டும் கூட அமிர்தலிங்கம் சுடப்பட்டாரல்லவா?..... அந்தக் கொலை தீர்வுக்கான தியாகமாய் மாறி இருப்பின் தமிழரசுக்கட்சி இன்று தீர்வைப் பற்றிப் பேசுவதில் ஏதோ நியாயம் இருந்திருக்கும்.

### தற்போதேனும் தமிழரசுக்கட்சி தலையாட்டுமா?

இன்றைய அரசியல் சூழலில் மனிதநேய அமைப்புக்கள், மற்றும் ஒருசில சர்வதேச சமூகத்திற்கு அரசு பதில் சொல்லவேண்டுமே தவிர தமிழர்களின் அதிகாரப் பகிர்வு என்கிற விடயத்தில் அரசு பெரும்பான்மைப் பலத்தில் செல்ல வழி உண்டு. நாடாளுமன்றில் தமிழ் அரசியல்வாதிகளின் ஆதரவும் தேவையில்லை, எதிர்ப்பும் தேவையில்லை, எந்த அரசியல் கொள்கைகளையும் எமது பெரும்பான்மைப் பலத்தால் நடைமுறைப்படுத்துவோம் என்று வெளிப்படையாகவே பேசுகிறார் தென்னிலங்கை அரசியல்வாதி ஒருவர். தமிழரசுக்கட்சி ஏன் யதார்த்தத்தைப் புரிந்து கொள்கின்றார்கள் இல்லை என்பதுதான் பலருக்குப் புரியாதுள்ளது.

தமிழரசுக்கட்சி தனிநாட்டு நினைப்பையும், போராட்டம் வெடித்துத் தீர்வு காணுதல் என்ற வீறாப்புகளையும் கைவிடாமல் எப்படித் தமிழர்களிற்கு தீர்வு கிடைக்கச் செய்வது?... தீர்வினை விரும்பாத தீவிரவாதிகள் தமிழர்களுக்குள் இருக்கின்றார்கள் என்றுதான் கூறவேண்டும்.

தமிழ் மக்களின் எதிர்கால அரசியல் உரிமைகளோடு விளையாடுகின்றார்களா? புரியவில்லை. பெரும்பாலான தமிழர்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட தமிழரசுக்கட்சி மாத்திரமே இதற்குப் பதில் சொல்ல வேண்டும். மற்றைய கட்சிகளிடம் தமிழ் மக்கள் கேட்க முடியாது. ஏனெனில் பெரும்பான்மை வாக்குப்பலத்தை தமிழ் மக்கள் அவர்களுக்குக் கொடுக்கவில்லை.

இருக்கின்ற மாகாணசபை அதிகாரங்களுடன் மேலதிகமாக சேர்ப்பது தொடர்பான விடயத்தைக் கலந்துரையாட வருமாறு தமிழரசுக்கட்சிக்கு திரும்பத் திரும்ப அழைப்பு விடுக்கப்பட்டது. பொற்கதிரைகளில் வீற்றிருக்கும் தமிழரசுக்கட்சியினர் இறங்கவில்லை. தென்னிலங்கை இனவாதிகளின் முற்றுகை வலுப்பட்ட பின்னர்தான், இருக்கின்ற அதிகாரங்களைக் குறைப்பது தொடர்பான தெரிவுக்குழுவிற்குச் செல்வது பற்றிப் பேசுகிறது.

எல்லாம் தமிழர்களின் தலைவிதிதான். 60 வயதில் அறளை பேரும் என்று அரசினால் கொடுக்கப்படும் ஓய்வு அரசியலில் இல்லையா?.....

தமிழர்கள் நிம்மதியாக வாழ... - வெண்கட்டியன்

# முதியோர் இல்லத்தில் உள்ளோரும் வாக்காளராகப் பதிவதற்கு அனுமதி

(கொழும்பு)

2013 வாக்காளர் இடாப்பு திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வைத்தியசாலைகளில் நீண்டகாலமாக தங்கியிருந்து சிகிச்சை பெறுவோர், முதியோர் இல்லங்கள் மற்றும் அநாதை விடுதிகளில் வசிப்போரையும் வாக்காளராகப் பதிவதில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

இது தொடர்பில் அந்தந்த பிரதேசங்களிலுள்ள கிராம சேவகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் இவர்கள் தொடர்பில் தகவல்களை வழங்குவதில் சம்பந்தப்பட்டோரின் குடும்பத்தினர் கிராம சேவகர்களுக்கு பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமெனவும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம். எம். மொஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாக்காளர் இடாப்பு திருத்த நடவடிக்கைகளின் முன்னோடியாகத் தற்போது 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல்கள் நாட்டின் சகல பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை மீளப் பெறும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை இடம்பெறும். வாக்காளர்களாகத் தம்மைப் பதிவு செய்யத் தகுதியுள்ளவர்கள் கண்டிப்பாக தம்மைப் பதிவுசெய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

குறிப்பாக வாக்குரிமை தொடர்பில் தெளிவில்லாத மக்களும் அது அவசியமற்றது என நினைப்பவர்களும் அதிகாரிகளை நெருங்க முடியாத அளவில் உயர் மட்டத்தில் இருப்போரும் தம்மை வாக்காளர்களாகப் பதிவுசெய்துகொள்வது மிகக் குறைவே. இவர்கள் விடயத்தில் இம்முறை கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. அதேவேளை ஆஸ்பத்திரிகளில் நீண்ட காலமாகத் தங்கியிருந்து சிகிச்சை பெறுபவர்கள், மன நோயாளிகளாகவுள்ளவர்கள், வயோதிபர் மடம் மற்றும் அநாதை மடங்களில் உள்ளவர்கள் பெருமளவில் காணப்படுகின்றனர்.

இவர்களை வாக்காளர்களாகப் பதிவதில் தேர்தல் செயலகம் அக்கறை காட்டி வருகிறது. எனினும் இவர்களை அந்தந்தப் பகுதி கிராமசேவகர்களிடம் இனங்காட்டி தேர்தல் இடாப்பில் அவர்கள் பதியப்படுவதற்கு பூரண ஒத்துழைப்பை சம்பந்தப்பட்டவர்கள் வழங்க வேண்டும் எனவும் பிரதித் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

# துப்பாக்கி வெடித்ததில் கடற்படைவீரர் காயம்

(கொழும்பு)

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் காயமடைந்த கடற்படைவீரரொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமைச்சேர்ந்த 25 வயதான ஜயந்த என்பவரே இவ்வாறு காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (25)

# கோப்பாய் பிரதேச செயலகத்தில் அழகியற் பொருட்கள் கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் தையல் அழகியற் கலைப் பொருட் கண்காட்சி நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிச் செயலர் பிறேமினி தலைமையில் நடைபெற்ற இந்த கண்காட்சிக்கு பிரதம அதிதியாக வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெ.சி.பெசிசியன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பயிற்சிகளைப் பெற்ற



மாணவர்களின் தையல் பொருட்கள் மற்றும் அலங்காரப்பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன. இதன்போது மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பயிற்சியைப் பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இங்கு உரையாற்றிய வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஜெ.சி.பெசிசியன் இந்த தையல் அழகுக் கலையினை டிப்ளோமா கற்கை நெறியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இதற்காக 30 பேர் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவ்வாறு டிப்ளோமா கற்கையினைப் பூர்த்தி செய்பவர்களுக்கு தொழில் பெறும் வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியில் பிரதேச செயலர் ம.பிரதீபன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்டப் பணிப்பாளா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், தையற் கலை மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# தற்காலிக கொட்டகை சரிந்து இரண்டு மாணவர்கள் காயம்



(வவுனியா)

வவுனியா நொச்சிமோட்டையில் கனிஷ்ட உயர்தரப் பாடசாலையின் தற்காலிக கொட்டகை சரிந்து விழுந்ததில் மாணவர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பாடசாலை அதிபர் தெரிவிக்கையில்,

பாடசாலை நேரம் வீசிய கடும் காற்றினால் இக் கொட்டில் வீழ்ந்துள்ளது. இக் கொட்டில் தற்காலிக தேவையின் பொருட்டு பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

அதிக மாணவர்கள் இக் கொட்டகைக்கு வெளி யில் நின்றமையினால் இரு மாணவர்களைத் தவிர வேறு எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இவ் வேளை கடந்த நான்கு மாதத்திற்கு முன்னர் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அதனை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மாணவர்கள் தொடர்ந்தும் கொட்டகையில் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என அக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மலேரியா தொற்றுடன் வருகின்றனர் ஐவர்

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

மலேரியா தொற்றுக்குள்ளான நிலையில் வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் இலங்கையரில் ஐவர் வீதம் மாதாந்தம் அடையாளம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் மலேரியா ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து மலேரியா தொற்றுக்குள்ளானவர்கள் நாட்டிற்கு வருகைத் தருவதாக அந்தப் பிரிவின் பணிப்பாளர் சரத் தெனியகே தெரிவித்துள்ளார்.

அவர்கள் இலங்கையை வந்தடைந்ததும் மலேரியா காய்ச்சல் ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக வெளிநாடு சென்று மீண்டும் நாடு திரும்புகின்றவர்களை சோதனைக்கு உட்படுத்துவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் சுயவிருப்பின் பேரில் பெரும்பாலானவர்கள் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள முன்வருவதில்லை என்றும் பதிவாகியுள்ளது.

கடந்த ஏழு மாதங்களுக்குள் மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஒரேயொரு நோயாளரே பதிவாகியுள்ளதாக சரத் தெனியகே மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நூல் வெளியீடு

குரும்பசிட்டி பொன்.பாலகுமார் எழுதிய அபிவிருத்தி வங்கியியல் நூல் வெளியீட்டு விழா நாளையதினம் நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவர் எஸ்.சிவபாதம் தலைமையில் நாளை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வட்டுக்கோட்டை இலங்கை வங்கி முகாமையாளர் வே.புவனேந்திரராஜா நூலினை வெளியிட்டுவைக்கவுள்ளார்.

நூலுக்கான மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியின் மேற்தரக்கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வன், இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண சிரேஷ்ட முகாமையாளர் எஸ்.சிவதீபன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# தென்மராட்சி வலய பாடசாலைகளின் சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் அண்மையில் இடம்பெற்ற சமூகவிஞ்ஞானப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களின் விபரம் வருமாறு,

தரம் - 6 (200இற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்கள்)

கே.கஜானன் (மறவன்புலோ சகலகலா வல்லி வித்), எஸ்.தனுஜன் (மிருசுவில் ஆர்.சி.ரி.எம். எஸ்.வித்), வி.கீர்த்திகா (எழுது மட்டுவாள் ஜி.ரி. எம்.எஸ்),

தரம் - 7

வி.கோபிநாத் (கைதடி நாற்குழி ஜி.ரி.எம்.எஸ்), எஸ்.துஷ்யந்தி (கைதடி நாவற்குழி ஜி.ரி.எம்.எஸ்), ஆர்.மதுசனா (இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்),

தரம் - 8

கே.மதுசன் (கைதடி நுணாவில் ஜி.ரி.எம்.எஸ்), எல்.மேனுசன் (கைதடி குருசாமி வித்), கே.சர்மினி (மந்துவில் பாரதி வித்)

தரம் - 9

எஸ்.கஜீபன் (கைதடி நாற்குழி ஜி.ரி.எம்.எஸ்), ஆர்.அனற்சுதர்சிகா (மிருசுவில் ஆர்.சி.ரி.எம். எஸ்), பிரதீபன் (கைதடி நாவற்குழி ஜி.ரி.எம்.எஸ்)

தரம் - 10

பி.சாருஜா (கைதடி நாற்குழி ஜி.ரி.எம்.எஸ்), எஸ்.சர்மிலன் (கைதடி குருசாமி வித்), எஸ்.சயந்தி (கைதடி நாவற்குழி ஜி.ரி. எம்.எஸ்),

தரம் - 11

எஸ்.தயானா (கைதடி நுணாவில் ஜி.ரி.எம்.எஸ்), ரி.தவாகரன் (கைதடி குருசாமி வித்), எம்.நிறோஜி (கொடிகாமம் ஜி.ரி.எம்.எஸ்)


தரம் - 12, 13

எஸ்.லக்ஷா (மீசாலை விக்னேஸ்வரா மா.வித்), எஸ்.நதுஷன் (மீசாலை விக்னேஸ்வரா வித்).

(தொடரும்)


3. 1kg வெண்டிக்காய் 52.00 ரூபாவாகும். 1kg 750g நிறையுள்ள வெண்டிக்காய்க்காக எவ்வளவு பணத்தை செலுத்த வேண்டும்? ..................................

4. $1\frac{1}{2} + 1 + \frac{1}{2} =$ ..................................




5. இத்திண்ம உருவின் முகங்களின் எண்ணிக்கை யாது? ......................

6. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ......................

7. 

A யில் இருந்து B வரைக்குமான தூரம் 160m ஆகும். எனின் B யில் இருந்து C வரையுள்ள தூரம் யாது? ..........................

8. 
இவ்வுருவில் காணப்படும் செங்கோணத்திலும் கூடிய கோணங்கள் எத்தனை? ..............

9. 10 மாம்பழங்களின் விலை ரூபாய் 95.00 ஆகும். எனின் ஒரு மாம்பழத்தின் விலை யாது? .................

10. விளையாட்டுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் கடையொன்றில் குறிப்பிட்ட ஒரு தினத்தில் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| பொருள் | ஒன்றின் விலை | விற்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| விளையாட்டு விமானம் | ரூபா 70 | 10 |
| அசையும் பொம்மை | ரூபா 120 | 03 |
| சிறிய பொம்மை | ரூபா 55 | 10 |
| விளையாட்டுக்கார் | ரூபா 27 | 21 |
| ஊதி | ரூபா 135 | 10 |

1. குறிப்பிட்ட தினத்தில் விற்கப்பட்ட விளையாட்டுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கை யாது? .................

அன்றைய தினம் அசையும் பொம்மையின் விற்பனையால் கிடைத்த பணம் எவ்வளவு? .......................

அப்பணம் ஊதிவிற்பனையால் கிடைத்த பணத்தை விட, எவ்வளவால் அதிகமானது? ..............................

4. எந்தப்பொருள் விற்பனையால் குறைந்தளவு பணம் கிடைத்தது? .................................................

5. ஒவ்வொரு விளையாட்டுப் பொருட்களிலும் ஒவ்வொன்றை வாங்க செலவாகும் மொத்தப் பணம் எவ்வளவு? ...............................

6. மு.ப. 9.30இற்குஆரம்பமான ஒரு பரீட்சை மு.ப. 10.45இற்குமுடிவடைந்தது. எனின் பரீட்சை நடைபெற்ற மொத்த நேரம் யாது? ........................................

**விடைகள்**

**(01)** 1. காலைக்காட்சி 2. ஒளி / வெளிச்சம் 3. மலை 4. குளிர்நிலவு 5. ஆலயங்களில் 6. விண்மீன்கள், நிலா 7. ஆலயங்கள் 8. நட்சத்திரங்கள் 9. மேல் + எழுகிறான் 10. அவை **(02)** 1. அந்தம் 2. தோய்ந்து **(03)** 1. குலங்கள் 2. தண்டனைகள் **(04)** 1. பசுக்கூட்டம் புல் மேய்ந்தது/பசுக்கூட்டங்கள் புல் மேய்ந்தன 2. தாவரங்கள் காபநீர்ரொட்சைட் வாயுவை சுவாசிக்கின்றன. 3. மான்கூட்டங்கள் நீர் அருந்தின. **(05)** 1) Listen please 2) May I come in **(06)** 1. நான் சாப்பிடுகிறேன் 2. தண்ணீர்போத்தல் (07) 1.நீங்கள் கடைக்குப் போகின்றீர்களா? 2. எனது விளையாட்டு வீடு **(08)** 1. விஷ்பம்தையல்/மெசின்தையல் 2.புள்ளடித்தையல் (09) 1. 4 2. 4 3. 2 4. 4 5. 2 6. 1 7. 1 8. 4 9. 2 10. 2 11. 1 12. 2 13. 2 14. 1 15. 3 (10) 1. இருவேரி 2. நாயுருவி 3. இலைப்பசளி 4. ஆடாதோடை (12) 1. 1) திருகோணமலை 2) அம்பாந்தொட்டை 2. 1) கட்டுநாயக்கா 2) இரத்மலானை (12) 1. 4cm 2. 2/ 775m/ 3. 91.00 4. 3 5. 04 6. 04 7. 40m 8. 01 9. 9.50சதம் 10. 1) 54 2) ரூபா360.00 3) ரூபா990.00 4) அசையும் பொம்மை 5) ரூபா407.00 6) 1மணத்தியாலம் 15 நிமிடம்



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

# கல்வி முரசு

பிரபல ஆசிரியர்களின் தொகுப்பு　　1.30 மணி

**(1) பின்வரும் பந்தியை தெளிவாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

பொழுது புலர்ந்தது இருள் கவிழ்ந்து மூடி இருந்த திரை மறைகின்றது. விண்மீன்களதும் தண்ணிலாவினதும் கொட்டம் ஒடுங்குகிறது. சூரியனின் வரவு கண்டு அவை ஒளிமழுங்கித் தோற்று ஓடுகின்றன. ஆலயங்கள் எங்கும் மணியொலி ஆர்க்கின்றது. பூஜைகள் நடைபெறுகின்றன. விண்மிசை வெண்ணிறமாக விளங்கிய ஆதவன் உதய கிரியில் இருந்து மேலெழுகிறான்.

1. பந்தி குறிப்பிடும் காட்சி எதுவாகும்? ..................................
2. இருள் என்னும் சொல்லின் எதிர்கருத்துச் சொல்லை தருக? ..................................
3. கிரி எனும் சொல்லுக்கு ஒத்த சொல்லை தருக? ..................................
4. தண்ணிலா என்பதன் மூலம் விளங்கிக் கொள்வது யாது? ..................................
5. மணியொலி எங்கு ஆர்க்கின்றது? ..................................
6. சூரியனின் வரவு கண்டு எவை ஒளிமழுங்கி தோற்றுப்போகின்றன? ..................................
7. அஃறிணை, பன்மை, படர்க்கை, பெயர்ச் சொல் ஒன்றைக் குறிப்பிடுக? ..................................
8. விண்மீன்கள் என்றால் என்ன? ..................................
9. மேலெழுகிறான் என்பதை பிரித்தெழுதுக? ..................................
10. அது எனும் சொல்லின் பன்மைச் சொல்லை தருக? ..................................

**(2) பின்வரும் இணைமொழிகளின் குறைகளை பூர்த்தி செய்து எழுதுக.**

1. ஆதி .................................... (அடி, முடிவு, தொடகம், அந்தம் )
2. ஆய்ந்து .................................... (தோய்ந்து, காய்ந்து, வறண்டு)

**(3) கோடிட்ட சொல்லுக்கான பொருளை தெரிவு செய்து கோடிடுக.**

1. "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதியார் பாடினார்.
(மதங்கள், குலங்கள், கிளைகள்)

2. அடித்தாரைச் சொல் ஆக்கினைகள் பண்ணிடுவோம்.
(சொல்லடிகள், வேதனைகள், தண்டனைகள்)

**(4) பின்வரும் வாக்கியங்களை திருத்தி எழுதுக.**

1. பசுக்கூட்டம் புல் மேய்ந்தன. ..................................
2. தாவரங்கள் காபனீரொட்சைட் வாயுவை சுவாசிக்கின்றது.
..................................
3. மான்கூட்டம் நீர் அருந்தின. ..................................

**(5) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. தயவு செய்து செவிமடுக்கவும் ? .................... 2. நான் உள்ளே வரலாமா? ....................


**(6) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. I am eating .................... 2. Water Bottle ....................

**(7) கருத்தினை தமிழில் எழுதுக.**



1. ஓயா கடேட்ட யனவா த? ....................
2. மகே செல்லம் கெதர ....................

**(8) பின்வரும் தையல் வகைகளின் பெயர்களை குறிப்பிடுக.**

1)  .................... 2)  ....................


**(9) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கறுப்புநிறத்துடன் கபில நிறமும் கொண்ட பறவை எது?
   1. மரங்கொத்தி 2. பஞ்சவர்ணக்கிளி 3. மீன்கொத்தி 4. செண்பகம்
2. இலங்கையின் தேசிய கொடியில் காணப்படும் அரசிலைகள் பல கருத்துக்களை விளக்குகின்றன அதில் ஒரு கருத்தாக அமைவது பின்வருவனவற்றுள் எது?
   1. சத்தியம் 2. வாக்குறுதி 3. விடுதலை 4. காருண்யம்
3. வீட்டுத்தோட்டத்தில் பூச்சிகளை பிடித்து உண்ணக்கூடியது எது?
   1. நத்தை 2. கும்பிடுபூச்சி 3. கருவண்டு 4. வெட்டுக்கிளி
4. வடமாகாணத்தில் அமைந்திராத மாவட்டம் ஒன்று.
   1. வவுனியா 2. முல்லைத்தீவு 3. யாழ்ப்பாணம் 4. மட்டக்களப்பு
5. பூ கோளத்தில் இலங்கைக்கு வடக்கே மிக அருகில் அமையப் பெற்றுள்ள நாடு.
   1. வங்களாதேசம் 2. இந்தியா 3. பூட்டான் 4. பாகிஸ்தான்
6. நல்ல நெல்லிலிருந்து பதர் நெல்லை வேறாக்குவதற்கு பயன்படுவது?
   1. குல்லம் 2. மரக்கால் 3. பரம்புப்பலகை 4. கடகம்
7. பழங்காலத்தில் தகவல்களை அறிவிப்பதற்காக பயன்படுத்தியது?
   1. பறை 2. கடிதம் 3. தந்தி 4. பெக்ஸ்
8. வழக்கை வட்டத்திற்கு அமையத் தனது இனத்தை பெருக்கிக் கொள்ளும் பிராணி.
   1. நத்தை 2. இராமபாணம் 3. திமிங்கிலம் 4. நளம்பு
9. நீர்ச்சக்கரம் ஒன்றின் சுழற்சியை அதிகரிக்கக்கூடிய வழிகளில் ஒன்று.
   1. பர்சிலுகளின் எண்ணிக்கையை குறைத்தல்.
   2. பர்சிலுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
   3. பர்சிலுகளுக்கிடையிலான இடைவெளிகளை அதிகரித்தல்.
   4. நீர் விழும் உயரத்தின் நீளத்தைக் குறைத்தல்.
10. பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகைகளை சமைத்து உண்ணும் போது ஏற்படக்கூடிய விளைவு?
    1. போசணைத்தன்மை அதிகரிக்கும். 2. போசணைத்தன்மை குறைவடையும்.
    3. உணவு நஞ்சாகக் கூடும். 4. சுவை குறையும்.
11. வரலாற்றில் வீரம் பொருந்திய மன்னனாக கருதப்படுபவன்.
    1. துட்டகைமுனு 2. காசியப்பன் 3. முகலன் 4. பண்டுகாபயன்
12. குருதிச்சோகை நோய் ஏற்படுவதற்கு காரணம்.
    1. கல்சியம் குறைபாடு 2. இரும்புச்சத்து குறைபாடு
    3. புரதக் குறைபாடு 4. விற்றமின் குறைபாடு
13. வீட்டின் உள்ளே வளர்க்கப்படும் பிராணி
    1. பசு 2. பூனை 3. எலி 4. நாய்
14. நீரை சுத்திகரிக்கப் பயன்படும் இரசாயனப்பதார்த்தம்.
    1. குளோரின் 2. கொண்டிஸ் 3. அற்கஹோல் 4. தேங்காயெண்ணெய்
15. மின்குமிழ்கள் இரண்டும் ஒளிரும் படி ஒழுங்கு செய்யப்பட்ட அமைப்பு எது?

1.  2.  3.  4. 

**(10) பின்வரும் தாவரங்களுக்கான பெயர்களை தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

இலைப்பசளி , நாயுருவி, ஆடாதோடை , இருவேரி , வசம்பு


1. .................... 2. .................... 3. .................... 4. ....................

**(11) வினாக்களுக்கு விடை தருக.**

1. இலங்கையின் துறைமுகங்கள் அமைந்துள்ள இடங்கள் இரண்டைத் தருக?
   1. .................... 2. ....................
2. இலங்கையின் பிரதான விமான நிலையங்கள் இரண்டை தருக?
   1. .................... 2. ....................

**(12) கணித வினாக்களுக்கு விடை தருக.**

1. 4cm அகலமும் 8cm நீளமும் கொண்ட மூன்று காகித அட்டைகளைக் கொண்டு அருகில் உள்ள உரு தயாரிக்கப்பட்டுள்ளது. A,B யின் நீளத்திற்கும் C,D யின் நீளத்திற்கும் இடையிலான வேறுபாடு எவ்வளவு? ....................




2. கலன் ஒன்றில் இருந்த 5*l* தேனில் 2*l* 225*ml* தேன் பாவிக்கப்பட்டால், மிகுதியாக இருக்கும் தேனின் அளவு யாது? ....................

# ராஜ்யசபாத் தேர்தலில் தி.மு.க போட்டியிடுவது குறித்து முடிவில்லை

## கருணாநிதி தெரிவிப்பு



ராஜ்யசபாத் தேர்தல்களில் தி.மு.க போட்டியிடுவது குறித்து இன்னமும் முடிவெதுவும் எடுக்கப்படவில்லை என அக்கட்சியின் தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அத்துடன், ராஜ்யசபாத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் செய்ய இன்னமும் கால அவகாசம் இருப்பதாகவும், இது தொடர்பில் ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார் ராஜ்யசபாவுக்கு ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டுமாயின், தற்போதைய சூழலில் அவருக்கு 34 சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு அவசியம். ஆனால் சட்டசபையில் தி.மு.கவுக்கு 23 உறுப்பினர்களே இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது, அதேவேளை, சட்டசபையில் தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்திற்கு 29 உறுப்பினர்கள் இருக்கின்ற போதிலும், அவர்களில் ஏழு பேர் முதலமைச்சர் ஜெயலலிதாவை சந்தித்து தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அ.தி.மு.கவின் எதிர்ப்பை மேலும் சம்பாதிக்காமல் ராஜ்யசபாத் தேர்தல்களைப புறக்கணிக்கலாமா என அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் ஆலோசித்து வருவதாக அறிய முடிகின்றது. ராஜ்யசபாத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாட தி.மு.க விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், விஜயகாந்த் அது தொடர்பில் எவ்வித பதிலும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது, இந்நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவைப் பெற தி.மு.க முயற்சித்து வருவதாக கூறப்படுகிறது. அக்கட்சிக்கு சட்டசபையில் 10 உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இன்னமும் எந்தவொரு முடிவையும் அறிவிக்கவில்லை

அதேவேளை, சட்டசபையில் 8 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் இத்தேர்தல் தொடர்பில் இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்தியச் செய்திகள்

# வலி நிவாரணி மாத்திரைக்கு மத்திய அரசால் தடைவிதிப்பு



(டில்லி)

வலி நிவாரணீ மாத்திரையினால் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படுவதாக கூறி அதனை உற்பத்தி செய்யவோ, விற்கவோ கூடாது என மத்திய அரசு தடை விதித்துள்ளது. டெக்ஸ்ட்ரோ ப்ரோபாக்ஸிபீன் (Dextropropoxyphene) என்ற பெயர் கொண்ட அந்த வலி நிவாரணி மாத்திரை 1957ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இந்த மாத்திரையை உட்கொள்வதன் மூலம் ஹைபோ டென்சன், இதயவலி உள்ளிட்ட பல்வேறு பக்க விளைவுகள் ஏற்பட்டன. ஏராளமானோர் மரணத்தைத் தழுவியது கண்டறியப்பட்டது. இதனால் இந்த வலி நிவாரணி மாத்திரையை பல நாடுகள் தடை செய்து விட்டன. பல்வேறு உடல் நலப் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக கூறி உலகின் பல்வேறு நாடுகள் ஏற்கனவே தடை செய்துள்ள நிலையில், இந்தியாவில் தற்போது அதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. அரசு பிறப்பித்துள்ள உத்தரவின்படி, இந்த மாத்திரையை விற்கவோ, உற்பத்தி செய்யவோ, விநியோகிக்கவோ கூடாது. இந்த தடை உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விடுமுறைக்குச் சென்ற மாணவி லண்டனில் மாயமானார்



இந்தியாவைச் சேர்ந்த இளம் பெண் இமான் ஷா என்பவர் பள்ளி விடுமுறையில் தனது குடும்பத்தினருடன் லண்டன் வந்திருந்தார்.

விடுமுறை முடிந்து 10ஆம் திகதி அவர்கள் நாடு திரும்புவதாக இருந்தது. ஆனால், 10ஆம் திகதி லண்டன் ஆக்ஸ்போர்ட் தெருவில் தாயாருடன் ஷாப்பிங் சென்ற அந்தப் பெண் திடீரென காணாமற் போனார்.

இதுகுறித்து அவரது பெற்றோர் அளித்த புகாரின் பேரில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து, காணாமற் போன இமான் ஷாவை தேடி வருகின்றனர்.

விசாரணையில், அவர் காணாமற் போனபோது கையில் பணம் மட்டுமே எடுத்துச் சென்றதும், செல்போன் இல்லை என்பதும் தெரியவந்தது.

இமான் ஷா தங்கியிருந்த ஹோட்டலைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கமராக்களில் பதிவான காட்சிகளை பொலிஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

இந்தியாவில் விளம்பர நிறுவனம் நடத்திவரும் இமானின் தந்தை தன்வீர் ஷா கூறுகையில், தனது மகள் காணாமற் போவதற்கு எந்தக் காரணமும் இல்லை என்றும், சிறப்பாக தேர்வு எழுதிய அவர் பல்கலைக்கழகத்தில் சேர உற்சாகமாக தயாராகி வந்ததாகவும் தன்வீர் ஷா கூறியுள்ளார்.

# கருணாநிதியை சந்தித்தார் அமைச்சர் ஜெயந்திநடராஜன்

## கூட்டணி மீண்டும் உருவாகுமா?



(சென்னை)

தி.மு.க தலைவர் கருணாநிதியை மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராஜன் நேற்று சந்தித்து பேசியது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சென்னை கோபாலபுரத்தில் உள்ள கருணாநிதியின் இல்லத்திற்கு நேற்றுமுற்பகல் 11.30 மணிக்கு வந்த மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெயந்தி நடராஜன் கருணாநிதியை சந்தித்தார்.

ஒருமணிநேரம் நடந்த இந்தச் சந்திப்பில் ராஜ்யசபா தேர்தல் தொடர்பாக பேசியதாக கூறப்படுகிறது. ஆனால், ராஜ்யசபா தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவு அளிப்பது குறித்து காங்கிரஸ் மேலிடம் தான் முடிவு செய்யும் என்று ஜெயந்தி நடராஜன் செய்தியாளர்களிடம் கூறினார்.

# மத்திய அமைச்சரவையில் விரைவில் வருகிறது மாற்றம்



மத்திய அமைச்சரவை விரைவில் மாற்றியமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரயில்வே அமைச்சர் பவன்குமார் பன்சால் மற்றும் சட்ட அமைச்சர் அஸ்வினி குமார் ராஜினாமா செய்ததால், அந்தப் பதவிகள் காலியாக உள்ளன.

இதேபோல மத்திய மந்திரி சபையில் இருந்து தி.மு.க. அமைச்சர்கள் ராஜினாமா செய்ததால், 5 இடங்கள் காலியாக உள்ளன. மேலும், திரிணாமுல் காங்கிரஸ் அமைச்சர்கள் ராஜினாமா செய்த இடங்களுக்கும் அமைச்சர்கள் நியமிக்கப்படவில்லை. பல அமைச்சர்கள் கூடுதல் பொறுப்புகளாக துறைகளை கவனித்து வருகின்றனர்.

அண்மையில் பிரதமர் மன்மோகன் சிங் அளித்த பேட்டியில், காலியாக உள்ள இடங்களுக்கு அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார். இந்நிலையில் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது காலியாக உள்ள இடங்களுக்கு அமைச்சர்களை நியமிப்பது பற்றி இருவரும் ஆலோசனை நடத்தியதாக தகவல்கள் கூறுகின்றன. மேலும்,, உணவு பாதுகாப்பு சட்டத்தை கொண்டு வருவது பற்றியும் இருவரும் விவாதித்ததாகவும் கூறப்படுகிறது.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# சோனியாவின் மருமகன் மீது நில மோசடி குற்றச்சாட்டு




காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் மருமகனும், பிரியங்காவின் கணவருமான ராபர்ட வதேரா நிலங்களை ஊழல் செய்து விற்பனை செய்துள்ளார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இவர் "டி.எல்.எப்." என்ற ரியல் எஸ்டேட் நிறுவனத்திடமிருந்து மிகக் குறைந்த விலைக்கு நிலங்களைப் பெற்றதாக "ஆம் ஆத்மி" கட்சி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார். இச் சர்ச்சைக்குரிய நிலப் பேரம் குறித்த வழக்கில் பிரதமர் அலுவலகம் தாக்கல் செய்த பிரமாண பத்திரம் தொடர்பான ஆவணங்களைத் தனக்குத் தருமாறு நுதன் தாக்குர், தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ், மனுதாக்கல் செய்தார். அனால், பிரதமர் அலுவலகம் தாக்கல் செய்த பிரமாண பத்திரம் தொடர்பான ஆவணங்களை தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் தர பிரதமர் அலுவலகம் மறுத்து விட்டது.

இந்த விவகாரம் ரகசியமானது என கருதுகிறோம். இதுபோன்ற ரகசியங்களை வெளியிட சுப்ரீம் கோர்ட்டு விலக்கு அளித்திருக்கின்றது. அதனால் இந்த ஆவணங்களை பகிர்ந்து கொள்ள முடியாது என்று கூறி, ஆவணங்களை அளிக்க மறுத்து விட்டது.

# நைல்நதிக்கு குறுக்கே அணை எகிப்து, சூடான் கடும் எதிர்ப்பு



(அடிஸ் அபாபா)

நைல்நதியின் குறுக்கே, எத்தியோப்பியா, அணைகட்டுவதால், எகிப்தும், சூடானும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. உலகின் மிக நீண்ட நைல் நதி, ஆபிரிக்காவில், 11 நாடுகள் வழியே ஓடுகிறது. இந்த நதிக்கு, வெள்ளை மற்றும் நீல நைல் என்ற பெயரில், இரண்டு கிளை நதிகள் உள்ளன. எத்தியோப்பியாவில் பாயும், நீல நைல் நதியின் குறுக்கே, நீர்மின் திட்டங்களுக்காக, இத்தாலி மற்றும் சீன நாட்டின் உதவியுடன், பெரிய அணை கட்டப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்காக, நதியின் நீர் ஓட்டத்தை, எத்தியோப்பியா திசை திருப்பி உள்ளது. 25 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் நடக்கும் இத்திட்டத்துக்கு, எகிப்தும், சூடானும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. எத்தியோப்பியாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், சூயஸ் கால்வாயை மூடி, போக்குவரத்து தடையை ஏற்படுத்த எகிப்து திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக எத்தியோப்பியா, எகிப்து, சூடான் நாடுகளைச் சேர்ந்த, 10 வல்லுநர்கள் கூடிப் பேசினர். புதிதாகக் கட்டப்படும் அணையால், நைல் நதியின் நீரோட்டம் குறையாது என, வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே, புதிய அணைகட்டும் திட்டத்தை யாரும் தடுக்கமுடியாது என எத்தியோப்பிய பிரதமர் ஹெய்லி மரியம் தெரிவித்துள்ளார்.

# 2050 இல் மக்கள் தொகை 960 கோடியை எட்டும்

## ஐ.நா. கணிப்பு

2050 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 960 கோடியை எட்டும் என்று ஐ.நா. சபை கணித்துள்ளது. இது தொடர்பாக உலக மக்கள் தொகை ஆய்வு என்ற தலைப்பில் ஐ.நா. சபை தாக்கல் செய்துள்ள அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய மக்கள்தொகை 720 கோடியாக உள்ள நிலையில், அடுத்த 12 ஆண்டுகளில் 100 கோடிக்கும் மேலாக மக்கள் தொகை அதிகரித்து 960 கோடியை எட்டும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வளரும் நாடுகளிலேயே மக்கள் தொகை அதிகரிக்கும் என்றும், இதில் பாதிக்கும் அதிகமான மக்கள் தொகை ஆபிரிக்க நாடுகளில் இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ந்த நாடுகளில் தற்போதுள்ள மக்கள் தொகை வளர்ச்சி அப்படியே இருக்கும் என்றும், அதேசமயம் வளர்ச்சி குன்றிய 49 நாடுகளில் மக்கள் தொகை இரட்டிப்பாகும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வரும் 2028 ஆம் ஆண்டில் மக்கள் தொகை எண்ணிக்கையில் சீனாவை இந்தியா முந்தும் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது. ஆபிரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளில் பிறப்பு விகிதங்கள் அதிகரித்து வருவதே மக்கள் தொகை அதிகரிப்புக்கு காரணம் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# சிரிய புரட்சிப் படையினருக்கு இரசாயன ஆயுதம் வழங்கப்படும்

## அசாத்திற்கு, ஒபாமா எச்சரிக்கை



இரசாயன ஆயுதங்களால் தாக்குதல்களை நடாத்திவரும் சிரிய அதிபருக்கு எதிராக புரட்சிப் படையினருக்கு உதவியளிக்கப்படுமென அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஷியா பிரிவைச் சேர்ந்த அதிபர் ஆசாத் ஆட்சிக்கு எதிராக சன்னி மற்றும் கிறிஸ்தவ போராளிகள் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக நடந்துவரும் மோதலால் அங்கு இதுவரை 93,000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. அதிகாரி நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்.

அலெப்போ நகரை போராளிகளிடமிருந்து கைப்பற்ற அதிபர் படை தீவிரமாக சண்டையிட்டு வருகிறது. இதில் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தி பொதுமக்கள் 150 பேரை அதிபர் படையினர் கொன்றுவிட்டதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

இதனையடுத்து போராளிகளுக்கு முன்னறிவிப்பின்றி ஆயுதங்கள் வழங்கி உதவிட அதிபர் பராக ஒபாமா முடிவு எடுத்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது. அதிபர் படை இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது உறுதியாகியுள்ளதால் போராளிகளுக்கு அதுபோன்று இரசாயன ஆயுதங்கள் வழங்கப்படும் என்று இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது. லெபனான் ஹிஸ்புல்லா இயக்கத்தினரும், ஈரானும் சிரியாவிற்கு உதவுவதால், அமெரிக்கா இந்த மிரட்டலை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# அக்பர் பக்டி படுகொலை வழக்கு கைதுசெய்யப்பட்டார் முஷாரப்



பாகிஸ்தான் நாட்டின் பலுசிஸ்தான் மாகாணத்தில் சுயாட்சி கேட்டுப் போராடிய அக்பர் பக்டி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில், 'சுயாட்சி கேட்டு ஆயுதப் போராட்டம் நடத்தியவர் அக்பர் பக்டி. கடந்த 2006 ஆம் ஆண்டில் இராணுவத் தளபதியாக இருந்த முஷாரப், அக்பர் பக்டி ஆதரவாளர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இதில், அக்பர் பக்டி படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு முஷாரப் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருந்த முஷாரப் சமீபத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக பாகிஸ்தான் திரும்பினார். இந்நிலையில், பெனாசிர் கொலை வழக்கு, இராணுவப் புரட்சியின் போது நீதிபதிகளை காவலில் வைத்தது, அக்பர் பக்டி கொலை வழக்கு என்று வரிசையாக அவர் மீதான வழக்குகளை நீதிமன்றங்கள் துரிதப்படுத்தின. அவர் நாடாளுமன்றத் தேரதலில் போட்டியிடவும் தடை விதிக்கப்பட்டது.

நீதிபதிகளை காவலில் வைத்த வழக்கில் அவரைக் கைதுசெய்ய பெஷாவர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து இஸ்லாமாபாத்தில் உள்ள முஷாரப்பின் பண்ணை வீட்டையே, துணைச் சிறைச்சாலையாக அறிவித்து அவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், அக்பர் பக்டி கொலை வழக்கில் அவர் தாக்கல் செய்த பிணை மனுவை பெஷாவர் உயர்நீதிமன்றத்தின் தீவிரவாத தடுப்பு அமர்வு தள்ளுபடி செய்தது. இதையடுத்து குவெட்டா நகர காவல்துறையினர் இஸ்லாமாபாத் பண்ணை வீட்டுக்குச் சென்று முஷாரப்பை கைது செய்வதாக கூறி அதற்கான உத்தரவை அளித்தனர். அவரை 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். தொடர்ந்து முஷாரப், பண்ணை வீட்டிலேயே காவலில் வைக்கப்படுவார்.


## பனை அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்.

## கூறுவிலை கோரல்


எமது சபையின் பாவனைக்கு கீழ்வரும் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியுள்ளமையால் தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து அவற்றிற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. தங்களின் கூறுவிலைகளை 25.06.2013 இற்கு முன் தபால் மூலம் அல்லது அலுவலகத்திலுள்ள கூறுவிலைப் பெட்டி மூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அனுப்பவேண்டிய முகவரி "பனை அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

| இல No | பொருள் Equipment | அளவு Specifications | எ/கை Quantity |
|---|---|---|---|
| 1 | Boiling vessel with lid - Stainless steel | 100 lit, 14 Gage | 04 |
| 2. | Gas Cylinder | 40 Kg | 06 |
| 3. | Gas burner - Industrial | 5 line | 06 |
| 4. | Boiling Pan - orr&69 | 24" | 04 |
| 5. | Boiling Pan - orr&aR | 18" | 04 |
| 6. | Boiling Pan - .6rr&aR | 10, | 04 |
| 7. | Sealer (Bottle, cork) | | 03 |
| 8. | Sealer (Bottle, Thread) | | 02 |
| 9. | Sealer - Polythene | 18" | 02 |
| 10. | Sealer - Polythene | 12" | 02 |
| 11. | Sealer - Polythene | 6" | 02 |
| 12. | Electric Oven | Large | 01 |
| 13. | Defreezer | Medium | 02 |
| 14. | Vessel - Stainless steel | 3' X 2' X2' - 14 Gage | 04 |
| 15. | Gas Cylinder | 12 Kg | 01 |
| 16. | Gas burner (Cooker) | Kitchen | 01 |
| 17. | Iron Cupboard | 6' X 3' X 1 1/2' | 04 |
| 18. | Office Table | 4'X 2' | 02 |
| 19. | Office Chair | | 02 |
| 20. | Plastic Chair | | 25 |
| 21. | Computer, Table, Chair | | 01 |
| 22. | White Board | 21/2' X 4' | 01 |
| 23. | Blender - Industrial | | 02 |
| 24. | Blender - Kitchen (Grinder) | | 01 |
| 25. | Refrocto meter | Brix | 04 |
| 26. | Power Generator | Single base, 5 KW | 01 |
| 27. | Glass Bottle | 190 ml | 10000 |
| 28. | Bottle cover | 50 X 1 | 200 |
| 29. | Timber Table | 4'X 6' | 02 |
| 30. | Pan - Stainless steel (Orr*zP) | 10" | 02 |
| 31. | Pan - Stainless steel (Orr&61) | 8" | 02 |
| 32. | Pan - Stainless steel ( e5rr&&9) | 6" | 02 |
| 33. | Hand held PH meter | | 04 |
| 34. | Thermo meter - Industrial | 0° C - 200° C | 10 |
| 35. | Buckets - Stainless steel | 20 lit | 10 |
| 36. | Buckets - Stainless steel | 10 lit | 10 |
| 37. | Boiling Vessel - Stainless steel | 18 Gage | 06 |
| 38. | Sugar Candy box - Stainless steel | 18 Gage, 20 lit | 20 |
| 39. | Settling tank - Stainless steel ** | 18 Gage | 04 |
| 40. | Container with lid - Stainless steel | 10 lit | 20 |
| 41. | Hydrometer | 0 - 30 | 04 |
| 42. | Hydrometer | 30 - 90 | 04 |
| 43. | Plastic Can (Storage) | [illegible]lit | 500 |
| 44. | Plastic Can (Storage) | 10 lit | 500 |

குறிப்பு: அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மாதிரிகளைப் பார்வையிடலாம்.

பசுபதி சீவரத்தினம்,
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

# வேலணையில் முத்தமிழ் விழா





வேலணை மத்திய கல்லூரியில் தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ் விழா நேற்றுக்காலை 10.30 மணியளவில் இடம்பெற்றது.

கல்லூரியின் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ஞாபகார்த்த மண்டபத்தில் செல்வன் சிந்துஷன் தலைமையில் இவ்விழா இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட வேலணைப் பிரதேச சபையின் தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமாகிய சி.சிவராசா உரையாற்றுகையில்,

எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முழுமூச்சாக ஈடுபட்டு அதனை ஒரு உச்ச நிலைக்குக் கொண்டு வருதல் தற்கால சூழ்நில்லயில் மிக முக்கியமானதாகவுள்ளது.

அத்துடன் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இனிவரும் காலங்களில் இவ் அபிவிருத்தி ஒரு உச்ச நிலையைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே எம் அனைவரினதும் விருப்பமாகவுமுள்ளது.

அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் எமது பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் அதீத கவனம் எடுத்துச் செயற்படுவது தற்கால கட்டத்தின் தேவையாகவுள்ளது என்றார்.


அத்துடன், எமது பிரதேச அபிவிருத்திக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசின் ஊடாக மேற் கொண்டு வரும் பணிகளுக்கு நாம் ஒன்றிணைந்து கைகொ டுப்பதுடன், எமது பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகளும் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் மேற்படி நிகழ்வில் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

## புதிய..

தளபதியாக கடமையாற்றிய காலப்பகுதியில் அவரின் மேற்பார்வையின் கீழ் மூன்று படைப் பிரிவுகள் இராணுவ முன்னெடுப்புக்களை மேற்கொண்டன. இலங்கை இராணுவ வரலாற்றில் மிகப்பெரிய இராணுவ படைப்பிரிவுகளைக் கையாண்ட இராணுவ அதிகாரி என்ற பெயரை ஜகத் ஜயசூரிய தக்கவைத்துக் கொண்டார்.

ஜெனரல் ஜகத் ஜயசூரிய, 1977ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான 30 வருட யுத்தத்தின்போது அவர் இராணுவ சேவையில் பெரும் பங்காற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரை இறுதிக்கு தென்னாபிரிக்கா தகுதி



சம்பியன் ராபிக் போட்டியில் அரையிறுதிக்கு தென்னாபிரிக்கா தகுதி பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற 50 ஓவர் கொண்ட போட்டி மழை காரணமாக 31 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 31 ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத்தியத் தீவுகள் அணி 26.1 ஓவரில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 190 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்த மழை காரணமாக போட்டி முடிவுறுத்தப்பட்டு புள்ளி அடிப்படையில் தென்னாபிரிக்கா அரையிறுதிக்கு நுழைந்தது.

# கைதிகளுக்கு...

நிலையில் சிறையில் இருப்ப தனால் பொ௱ருளாதார ரீதியாக அடிமட்டப் பிரச்சினைகள், பிள்ளைகளின் கல்விரீதியான செலவுகள் மற்றும் வாழ்விடம் என்பவைகளுடன் சட்டத்தரணி தொடர்பான உதவிகள் எனப் பல உதவிகள் தொடர்பாக நாம் பல தடவைகள் கூட்டமைப்பின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதுவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் இதுவரையிலும் மேற்கொள்ளவில்லை.

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களாகிய நாம் உங்களிடம் எதிர்பார்த்திருப்பது, அரசியல் கைதிகளினுடைய அடிப்படை விடயங்களான குடும்ப நலன் மற்றும் சட்டரீதியான உதவிகளையேயாகும். இது தொடர்பாகக் கூட்டமைப்பிடம் ஏதாவது திட்டங்கள் உண்டா?

தமிழ் அரசியல் கைதிகளில், திருமணமானவர்களின் எண்ணிக்கை, உடல் பாதிப்பானவர்களின் விவரங்கள் உள்ளிட்ட தரவுகள் தங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டனவா?

இவ்விடயங்கள் தொடர்பில் தங்களின் காரியாலயங்களில் முறையிடும்போது அதற்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாததையிட்டு மிக வேதனையாகவுள்ளது.

பல கைதிகளின் பிள்ளைகள் கல்வியைத் தொடர புத்தகம், அப்பியாசக் கொப்பிகள், எழுதுகருவிகள் இன்றியும், ஒருவேளை உணவுக்கே கஷ்டப்படும் பொருளாதாரமற்ற நிலையில் கல்வியையும் இடை நிறுத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நலன்புரி குழுவொன்றை நியமிக்க வேண்டும். அந்த நலன்புரி குழுவுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளிலிருந்து உதவிகள் கிடைக்கும். அந்த உதவிகளைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாகும் என இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள், மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசப் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## பொலிஸாரின் தேடுதலில் 14 பேர் கைது

கடந்த வாரம் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தம் 14 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப் பட்டிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் திருட்டு மின்சாரம் பெற்ற ஒன்பது பேரும் உள்ளடங்குவதுடன், சட்ட விரோத சாராயம் வைத்திருந்தது, சட்டவிரோதமாக மணல் ஏற்றியது, மாடு வெட்டியது சம்பந்தமாகவும், ஏனையவர்கள் கைது செய்யப் பட்டதாகவும் யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன்,. பாசையூர் அந்தோனியார் உற்சவத்தின் விசேட திருவிழா நிகழ்வில் எந்தவித குற்றச் செயல்களும் இடம்பெறாவண்ணம் யாழ். பொலிஸார் பாதுகாப்பு ஒழுங்கை மேற்கொண்டிருந்த தாகவும் அதேபோன்று நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவில் திருவிழா நிகழ்வுக்கு வரும் மக்களுக்கான விசேட பாதுகாப்பு ஒழுங்குகளும் மேற்கொளளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (பா)

# பொலிகண்டி கொலை வழக்கு சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(வடமராட்சி)

பொலிகண்டி பகுதியில் சோதிலிங்கம் தெய்வமலர் (வயது-64) என்பவரை வீட்டில் வைத்துக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் இருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின்போது உறவின்ரான நபரே கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவரெனத் தெரிய வந்துள்ளதாகவும், மற்றையவர் ஆட்டோ சாரதியெனவும் இவருக்கும் கொலைச் சம்பவத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து குறித்த இருவரும் பருத்தித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த நீதிபதி சாரதியை விடுதலை செய்ததுடன், உறவினரான மற்றைய நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (116)

# நல்லூர் ஆலயச் சூழலில் இரகசிய பொலிஸார் உஷார்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயச் சூழலில் குற்றச் செயல்கள் இடம்பெறாமல் தடுக்குமுகமாக சிவில் உடை தரித்த பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

புகழ்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு வழிபடுவதற்காக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வரும் பக்தர்கள் சிரமமின்றி வழிபாட்டினை மேற்கொள்ளவும், ஏதேச்சையாக அந்த ஆலயச் சூழலில் நடைபெறும் தங்க நகை களவு மற்றும் குற்றச் செயல்களைத் தடுக்கும் முகமாகவுமே கடந்த வாரம் முதல் சிவில் உடை தரித்த பொலிஸார் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அந்தப் பகுதியில் குற்றச்செயல்கள் எதுவும் நடைபெற்றால் அங்கு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பொலிஸார் தாமாகவோ தேவையேற்படின் மேலதிக பொலிஸாரை அங்கு வரவழைத்து குற்றச் செயல்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# நெடுங்கேணியில் விளையாட்டு விழா



(நெடுங்கேணி)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகம் நாடாத்தும் விளையாட்டு விழா ஒன்றை நடத்தியுள்ளது.

நெடுங்கேணி பிரதேச செயலகத்தக்கு உட்பட்ட விளையாட்டு கழகங்களை ஒருங்கிணைத்து நெடுங்கேணி மத்திய விளையாட்டு மைதானத்தில் நெடுங்கேணி பிரதேச செயலர் க.பரந்தாமன் தலைமையில் இவ்விழா இடம்பெற்றுள்ளது இதில் பிரதம விருந்தினர்களை கனகராயன்குளம் மகாவித்தியாலய மாணவர்களின் பான்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு பொதுச் சுடர், தேசியக் கொடி ஏற்றலுடன் ஆரம்பமாகி இன் நிகழ்வின் மரதன் ஓட்டம், கால் பந்தாட்டம், 100 மீற்றர் ஓட்டம், கயிறிழுத்தல், தட்டு ஏறிதல், ஈட்டிஏறிதல், போன்ற விளையாட்டுக்கள் இடம்பெற்று வெற்றியீட்டிய வீராங்கனைகளுக்கு சான்று தழ்களும் பரிசுகளும் வழங்கி கௌரவித்ததோடு பிரதம விருந்தினராக வவுனியா மாவ ட்ட அரசாங்க அதிபர் அ.பந்துல ஹரிச்சந்திர, பணிப்பாளர் ரணவக்க பாடசாலை அதிபர்கள் ஆகியோரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (40)

# ஜனாதிபதியின் செயலாளர் டுவிட்டரில் பதில்

(கொழும்பு)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவிடம் டுவிட்டர் சமூக வலைத்தளத்தினூடாக கேள்விகள் கேட்டு அதற்கான பதில்களை அவரிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய, எதிர் வரும் 19ஆம் திகதி புதன் கிழமை, இலங்கை நேரப்படி பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை ஜனாதிபதியின் செயலாளர், டுவிட்டர் சமூக வலையமைப்பினூடாக பொதுமக்களின் கேள்விகளுக்கு பதிலளிப்பார்.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ டுவிட்டர் முகவரியான @PresRajapaksa ஊடாக இந்த பதில்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# வடக்கின் வசந்தத்துக்கு வலுவூட்டும் நியமனங்கள்



(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் நியமனங்களைப் பெறும் வடமாகாண சிற்றூழியர்கள் அனைவரும் ஒன்றிணைந்து உண்மையாக உழைக்க வேண்டுமென வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற வடமாகாண கல்விசாரா விவசாய மற்றும் சுகாதார ஊழியர்களுக்கான நியமனங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏழு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் நேர்முகத் தேர்விற்கு தோற்றியதன் அடிப்படையில் இந்நியமனங்களை வழங்கி வைக்கின்றோம். கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினது தலைமை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக வடமாகாணத்தில் 6,600 நியமனங்களை வழங்கியுள்ளோம். தொடர்ந்தும் ஜனாதிபதியினது தலைமை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிசாட பதியுதீன் ஆகியோரது வழிகாட்டலுக்கு அமைவாகவும் நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனிடையே வடபகுதியின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வடக்கின் வசந்தம் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிதாக நியமனங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் உள்ளடங்கலாக அனைவரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்றுகாலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ் கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், புத்தூர், ஆவரங்கால், ஊறணி, வீரவாணி, வாதரவத்தை, சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமனாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகரசபைப் பகுதி, ஸ்ரான்லி வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி, தட்டார்தெரு தொடக்கம் முட்டாஸ்கடைச் சந்தி வரையான பிரதேசம், மனோகரா பிரதேசம், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும்,

17.03.2013 திங்கட்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் சோரன் பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும் 18.06.2013 செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மதியம் 05.30 மணிவரையும் குஞ்சர்கடைப் பிரதேசத்தின் ஒரு பகுதி, உடுப்பிட்டி, தொண்டைமனாறு, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, நவிண்டில், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும்,

19.06.2013 புதன்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு ஒரு பகுதி, வதிரி, அல்வாய்ப் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும்,

20.06.2013 வியாழக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரையும் அச்சுவேலி இடைக்காடு, பத்தமேனி, வளலாய், தொண்டமனாறு வீதிப பிரதேசம், ஈஞ்சை வைரவர் பிரதேசம், சோரன்பற்று, புதுக்காடு ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

# அடிக்கல் நாட்டுவிழா

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியான் ஜே/433 கிராம அலுவலர் பிரிவில் கியூடெக் நிறுவனத்தினால் அமைக்கப்படவுள்ள சென்.மேரிஸ் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு நேற்று காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

கியூடெக் யாழ். மாவட்ட இயககுநர் றெக்னோ, அருட்தந்தை அல்பிரட், தாளையடி பங்குத் தந்தை யேசுரட்ணம், உதவிப் பங்குத் தந்தை யஸ்ரின், மற்றும் கட்டைக காடு பாடசாலை அதிபர் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தனர். இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொடுப்பனவுப் பணம் வழங்கப்படுகிறது

வரணி வடக்குப் பிரதேசத்தில் சமூக சேவைகள் திணைக்களத்தால் மாதாந்த உதவிப் பணம், மற்றும் 70 வயதிற்கு மேற்பட்ட ஆயிரம் ரூபா கொடுப்பனவு, ஊனமுற்ற வலுவிழந்தவர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது தபாலகத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

அதேவேளை ஊனமுற்றவர்களுக்கான மகிந்த சிந்தனையின் கீழ் வழங்கப்பட்டு வரும் மாதாந்த ஓய்வூதியமான மூவாயிரம் ரூபா கொடுப்பனவு சாவகச்சேரி பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலகத்தில் வைத்துக் காசோலையாக வழங்கப்பட்டு வருகிறது. (150)

# பொன்சேகா வழக்கு ஒத்திவைப்பு



(முன்னாள்)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஓய்வுபெற்ற இராணுவ கெப்டன் சேனக்க ஹரிப்பிரிய டி சில்வா ஆகியோர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களுக்கு புகலிடம் அளித்தமை மற்றும் அரசாங்கம் மீதான அவர்களின் விசுவாசத்தை சீர்குலைப்பதற்கு சதியில் ஈடுபட்டமை தொடர்பிலான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்ரமசிங்க முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை இடம்பெற்றது.

தனது கட்சிக்காரரால் நேற்று நண்பகல் 1.30 இற்கும் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் கலந்துகொள்ள முடியாத காரணத்தினால் வேறொரு தினத்தில் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு இரண்டாவது பிரதிவாதியான சேனக்க ஹரிப்பிரிய சார்பில் அஜரான சட்டத்தரணி உபுல் ஜயசூரிய தெரிவித்துள்ளார். இந்த வழக்கு விசாரணை ஓகஸ்ட் 1 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# சிறைச்சாலையில் தேடுதல்: கைபேசிகள் சிக்கின

வெலிக்கடை சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது சிறைக் கைதிகளிடம் காணப்பட்ட கைத்தொலைபேசி, போதைப் பொருள் போன்றவை மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார். கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கைதிகள உள்ள சிறைப் பகுதியில் இச் சோதனை மேற்கொள்ளப்பட்டதாக சிறைச்சாலை ஆணையாளர நாயகம் தெரிவித்தார்.

இங்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, 12 கையடக்கத் தொலைபேசிகள், 18 சிம் காட்கள்மற்றும் 50,000 பெறுமதியான போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். நீதிபதி சரத் அம்பேபிட்டி கொலை குற்றவாளி வசம் இருந்து இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

100% SUCCESS...
போதும் போதும் என்று ஆங்கிலம் சரளமாக பேசிடுங்கள்
யாழில் நம்பிக்கையான கல்விநிறுவனம்
DIPLOMA IN ENGLISH
NEW BATCHES START
SAT/SUN 3.30 - 6.00 P.M 15.06.2013 @ 3.30
MON/WEN 4.15 - 6.15 P.M 17.06.2013 @ 4.00
IELTS REGISTRATION CENTRE
Preparations classes Sat/Sun 11.00 -02.00
FRENCH/DUTCHSPOKEN SINHALA
A1,B1,B2 Classes, Registration & Exams
தற்போது மேலும் புதிய அம்சங்கள்
E-CITY
College of English & IT
இல-372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0774924166 / 0770610271
(C/2837)

# கூட்டமைப்பு எம்.பி. அரசுடன் இணைய முயற்சியா?

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம், அரசாங்கத்துடன் இணைந்து செயற்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பிலான பேச்சுவார்த்தையொன்று அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கும், வினோ எம்.பி.க்கும் இடையில் இடம்பெற்றதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கத்திடம் செய்தியாளர்கள் கேட்டபோது, அரசாங்கத்துடன் இணைந்து செயற்படப்போகிறேன் என்று வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என்று குறிப்பிட்டார்.

மக்கள் எமக்கு வாக்களித்து, எம்மை மக்கள் பிரதி நிதிகளாக தெரிவு செய்திருக்கின்றார்கள். மக்களின் ஆணையை மீறி நாங்கள் ஒரு போதும் செயற்படமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரநிதிகள் மக்கள் பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர்களுடன் சந்திப்பது வழமையானது. அதிலும் வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற நான், மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கடற்தொழிலில் தொடர்பில் ஏற்பட்டு வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சர்களுடன் கலந்துரையாடினேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# மாகாணத் தேர்தலுக்கு தயாராகிறது சுதந்திரக்கட்சி

மூன்று மாகாணசபைகளுக்கும் ஒரேதினத்தில் தேர்தல் நடாத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. வட, வடமத்திய மற்றும் மத்திய மாகாணசபைத் தேர்தல்களை ஒரே தினத்தில் நடாத்த வேண்டுமேன மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இந்தத் தேர்தல்களுக்கான பிரச்சாரங்களை மேற்கொள்ள மூன்று கமிட்டிகள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு அமைச்சர் தலைவராக நியமிக்கப்படவுள்ளார். முக்கிய அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, மைத்திரிபால சிறிசேன மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்தக் குழுக்களை வழிநடாத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூன் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.